


# எனது பேனாவில் இருந்து...

கரவை மு. தயாளன்

# எனது பேனாவில் இருந்து

கரவை மு. தயாளன்

நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | எனது பேனாவில் இருந்து... |
| ஆசிரியர் | : | கரவை மு. தயாளன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சமூக சிந்தனைகள் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு<br>2016 June |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | : | த. சௌந்தர் |
| வெளியீடு | : | TGL Publications<br>London |
| ISBN | : | 9780993532580 |

# உள்ளடக்கம்

**கதைகள்:**


தோற்றது தாய்மையா? 15

அம்மாக்களும் பிள்ளைகளும் 26

லண்டன் நகரத்து வீதிகளில் 39

ஜெர்மானிய வீடுகளில் 50

பாவம் கனகா 57

என்னை மறந்ததேன் 64


**கட்டுரைகள்:**


திருவருளின் திருநீறு 73

சமயமும் சம்பவங்களும் 1 76

உன்னதங்கள் 80

நாதனை மறைத்திடும் நவக்கிரகங்கள் 84

சமயமும் சம்பவங்களும் 2 93

பரிணாமம் 97

உலகெலாம் உணர்ந்து... 102


**கவிதைகள்:**


ஓ! என் இனிய தமிழே! 113

நீ எப்போது என்னுள் வந்தாய்? 115

வேரோடு நாம் பெயர்ந்தோம் 117
ஏன் தமிழே! 119
சேகுவேரா 121
விடுதலைக் கனவு 123
மணலாகிப் போனேன் 125
இன்னுமா உனக்குப் புரியவில்லை? 127
இத்தனைக்குப் பின்னும்.. 130

நாடகம்:

தமிழ் படும்பாடு 135
பாஞ்சாலி சபதம் 157

**English stories:**

Lonliness 191
Identity 200
Reflection 207

**English poems:**

When I See Your Eyes 219
Tears always my friends 221
You Are My Soul 223
You are Uranium 235 225

| | |
|---|---|
| Please be with me! | 227 |
| Teacher's Voice | 229 |
| God's Secret | 231 |
| Where are you? | 233 |
| Today is your birthday | 234 |
| God is in the dream world | 236 |
| You are great! | 238 |

# என்னுரையும் முன்னுரையும்

என்னுடைய பேனாவினால் இதுவரை காலமும் எழுதப்பட்டுப் புத்தகமாகாத என் எழுத்துக்களின் தொகுப்புதான் இந்தப் புத்தகம்.

நான் எழுதத் தொடங்கிய காலத்தில் எழுதிய பல படைப்புகள் காணாமற் போய்விட்டன.

நான் முதலில் எழுதிய கதை கண்ணீரிலெழுத்து.

அது இப்போ என் கைவசம் இல்லை.

அடுத்து நான் எழுதியது 'என்னை எவராது கற்பழியுங்கள்' இதுவும் என் கைவசம் இல்லை.

கரவைக்கவி என்ற பெயரில் நான் ஈழ நாட்டில் எழுதிய கவிதைகளும் கைவசம் இல்லை.

பின்பு நான் எழுதியவைகள் என் மனைவியால் சேகரிக்கப் பட்டு இப்போது வடிவம் பெற்றுள்ளன.

மனைவிக்கு நன்றி.

நான் எழுதியவைகள் என்று சொல்வதைவிட கிறுக்கியவைகள் என்று சொல்வது சாலப்பொருந்தும்.

பல வருடங்களைத் தழுவிய படைப்புக்களே இவைகள். எப்போ பிரசுரமாகின என்றோ எப்போ எழுதப்பட்டன என்றோ தெரியாது.

எல்லாம் என் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தே தொகுக்கப் பட்டுள்ளன. ஆதலால் வருடங்கள் தெரிவது சாத்தியமில்லை. நான் அதற்கு முயற்சிக்கவுமில்லை. அவ்வப்போது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை தந்திருக்கிறேன். சில கவிதைகளாக இருந்தன. சில கதைகளாக இருந்தன. சில கட்டுரைகளாக இருந்தன. அதுவும் அண்ணளவான தெரிவுகளே. நான் ஒரு கட்டுக்குள் நிற்க விரும்பாதவன். 'இது சிறுகதை போல் இல்லையே.. கவிதைபோல் இல்லையே' என்று நீங்கள் கவலைப்பட்டால் அது உங்களின் பிரச்சினை. கவிதை என்றால் இப்படித்தான்... கதை என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும் என்ற இலக்கணங்களுக்குள் உங்களை நிறுத்திக் கொண்டுள்ளீர்கள். அது உங்களுடைய தவறுமில்லை.

இந்தப் புத்தகத்துக்கு யாரிடமும் முன்னுரை வாங்கவில்லை. நானே முன்னுரை எழுதியுள்ளேன். முன்னுரை என்பது அறிமுகமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவன். முன்னுரை எழுத படைப்புகளை கொடுத்தால் அவர்கள் முகம்

சுழிக்கிறார்கள். முழுவதையும் இருந்து வாசிக்கவேண்டுமே என்ற முணுமுணுப்புகள் வருகின்றன. அதையும் தாண்டி எழுதினால் விமர்சனம் எழுதுகிறார்கள்.

ஆதலால் என்னுடைய படைப்புகளை நானே அறிமுகம் செய்யும் கைங்கரியத்தைத் தொடக்கி வைக்கிறேன்.

## இந்தத் தொகுப்பில்

ஆறு சிறுகதைகள், எட்டு கட்டுரைகள், ஒன்பது கவிதைகள், இரண்டு நாடகங்கள், இரண்டு ஆங்கிலச் சிறு கதைகள், பத்து ஆங்கில கவிதைகள் இடம் பெற்றுள்ளன. முதல் மூன்று கதைகளும் லண்டனின் வாழ்க்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. மற்றைய இரண்டும் ஜேர்மன் நகரத்து சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

இறுதிக்கதை நாட்டின் போர்ச் சூழலைத் தொட்டிருக்கிறது.

புலம் பெயர் வாழ்வியலோடு கூடிய தொடர்பு கொண்ட என் வாழ்க்கைப் பின்புலம் இவற்றை எழுதத் தூண்டியது. குறிப்பாக லண்டனது வாழ்க்கைச் சூழலில் கல்வி சம்பந்தமான ஒரு கதையும் இளந்தலைமுறையின் பழக்க வழக்கம் சம்பந்தமாக ஒரு கதையும் காலத்தின் தேவை கருதி உள்ளன.

கட்டுரைகள் பெரும்பாலும் சமய உலகில் நடைபெறும் தில்லுமுல்லுகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆத்மீகமும் சமயமும் இரு துருவங்கள் என்று ஆழமாக நம்புபவன் நான். சமயம் பற்றிய என் பார்வைகள் நிரம்பக் கரடுமுரடானவைதான். அது தேவையானதும்தான். கடவுள் எங்கும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவில்லை. கடவுள் சம்பந்தப்பட்ட விடயங்களே என்னுடைய குத்தீட்டிப் பார்வைகளை சந்தித்துள்ளன.

கவிதைகள் அவ்வப்போது சமூகம் கடவுள் இவை பற்றிய என்னுடைய அவ்வப்போது எழுந்த உணர்வுகளே!

ஆங்கிலத்தில் நான் எழுதியவை ஒரு பரிசோதனை முயற்சியே. எங்களுடைய இளைய தலைமுறை தமிழில் வாசிப்பதென்பது சாத்தியமற்ற ஒன்றாக மாற்றப்பட்டு விட்டதென்பது கவலையான ஒரு செய்தியே. அவர்களுக்கான சில படைப்புக்களே இவை.

எதிர்காலத்தில் ஆங்கிலத்தில் நிரம்ப எழுத வேண்டுமென்பது எனது அவா! பார்ப்போம்!

நான் நானாகவும் எனது எழுத்துக்கள் மக்களுடைய தாகவும் அதன் வீச்சுக்கள் இறைவனுடையதாகவும் இருக்க வேண்டும் என்பது என் மனப்பூர்வமான ஆசை.

இந்தப் புத்தகத்துக்கு தன் வேலைப் பழுக்களின் மத்தியிலும் அட்டைப்படத்தை வரைந்துதவிய திரு. த. சௌந்தர் அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றிகள்.

இந்தப் புத்தகம் செவ்வனே வெளிவருவதற்காக தன் நேரத்தைச் செலவிட்ட திரு. சிவானந்தசோதி அவர்களை என்றும் மறக்க முடியாது. அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

இப்புத்தகத்தினை அழகாகக் கொண்டுவந்த வடிவமைப் பாளர்களுக்கும் அச்சகத்தாருக்கும் என் சிரந்தாழ்த்திய வணக்கங்கள் உரித்தாகட்டுமே.

இறுதியாக இதற்கான உதவிகளை புரிந்த என் உறவுகள் மற்றும் நண்பர்கள் மாணவர்கள் எல்லோருக்கும் என் மனமுவந்த நன்றிகள்.

*கரவை மு. தயாளன்*

# கதைகள்

# தோற்றது தாய்மையா?

அந்த மண்டபம் கலகலப்பாக இருந்தது.

லண்டனில் பெரும்பாலான திருமணங்கள் இங்குதான் நடைபெறும்.

அளவான அழகான மண்டபம்.

விலை அதிகமல்ல ஆனால் குறைவுமல்ல. நடுத்தரம். இந்த மண்டபத்தில்தான் சபேசனுக்கும் சாரதாவுக்கும் இன்று திருமணம் நடைபெறப் போகிறது.

சபேசனுக்கு இருபத்தெட்டு வயது. அளவான உயரம். கம்பீரமான தோற்றம். மேவி இழுத்த தலைமயிர். சாதாரணமாய் அழகான வாலிபன்.

சாரதா சபேசனுக்கேற்ற உயரம். கொஞ்சம் நல்ல நிறம். வட்ட முகம். சதை தொங்காத தேகம். முல்லைச் சிரிப்பு. சாந்தமான கண்கள்.

காதல் கல்யாணம். வேலை புரிவது ஒரு இடத்தில். ஒத்துப் போனதால் காதல் கனிந்தது.

இதனைப் பெற்றாரும் புரிந்து கொண்டதால் இன்று திருமணம் நடைபெறப் போகிறது.

மண்டபம் மெல்ல மெல்ல நிரம்பிக் கொண்டிருந்தது.

இன்னும் மாப்பிள்ளை வரவில்லை. பெண் முதலே வந்து அறையில் காத்திருக்கிறாள்.

மண்டபத்தின் கிழக்கால் அமைந்துள்ள சிறு மேடையில் நாதஸ்வர வித்துவான்கள் தங்கள் திறமைகளைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் அவரவர் அலுவல்களில் மூழ்கி இருந்தனர்.

மாப்பிள்ளையின் கார் வந்து விட்டது.

மாப்பிள்ளை பக்கத்தைச் சேர்ந்த ஒருவர் நாதஸ்வரக் காரர்களிடம் வந்து மாப்பிள்ளை வந்த செய்தியைக் கூறுகிறார்.

மாப்பிள்ளையினுடைய கார் மண்டப வாசலில் வந்து நின்றது.

வாசலுக்குச் சென்ற நாதஸ்வரம் மாப்பிள்ளை அழைப்புக்காக முழங்கிக் கொண்டிருந்தது.

மாப்பிள்ளை பட்டு வேட்டி சால்வையுடன் தோழன் சகிதம் காரை விட்டு இறங்குகிறார்.

மாப்பிள்ளை பட்டு வேட்டி சால்வையில் கச்சிதமாக இருந்தார்.

நெற்றியில் சந்தணப் பொட்டும் பளபளவென்ற பட்டு வேட்டியும் சபேசனை எடுப்பாகக் காட்டின.

மேளதாளங்களோடு ஆர்ப்பாட்டமாக மணமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

கிரியைகள் ஆரம்பமாகின.

சபையிலிருந்தவர்கள் காலங்காலமாக இந்தக் கிரியைகளைப் பார்த்திருந்தாலும் இன்று ஏதோ புதிதாகப் பார்ப்பதுபோல் கழுத்தை நீட்டிப் பார்த்தார்கள்.

இப்போது மணப்பெண் வரும் நேரம்.

ஒழுங்கமைப்பில் சினிமா கூடத் தோற்றுப் போகும்.

அழகான இனிமையான பாட்டு.

பாட்டுக்கேற்ற வண்ணம் மெல்ல மெல்ல அடியெடுத்துத் தோழிகள் புடை சூழ மணமகள் வந்து கொண்டிருந்தாள்.

மணமகள் மேடைக்கு வந்து மணமகனுக்கு இடப் பக்கமாக அமர்கிறாள்.

குருக்கள் தன் வேலையை ஆரம்பிக்கிறார்.

''மாங்கல்யம் தந்துனானே...'' சொன்னபடி தாலியை எடுத்து மணமகன் கையில் கொடுக்கிறார்.

சபேசன் மூன்று முடிச்சுப் போட்டுத் தன் கடமையை முடித்துப் பெருமூச்சு விடுகிறான்.

திருமண நிகழ்வு முடிந்து விடுகிறது.

இப்படி ஆடம்பரமாக நடந்த திருமண நிகழ்வின் மூலமாக சபேசனும் சாரதாவும் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர்.

நல்ல வாழ்க்கை.

இருவரும் வேலை செய்தார்கள். நல்ல வருமானம். நண்பர்களோடு கொண்டாட்டம்.

பல நாடுகளுக்குச் சுற்றுலாச் சென்றார்கள். இன்பமான வாழ்க்கை. துன்பமே இல்லை.

காலம் நகர்ந்து கொண்டிருந்தது. மூன்று வருடங்கள் முப்பது வினாடியாக கடந்து விட்டது.

இனிமேல் வாரிசு பற்றிச் சிந்திக்கவேண்டும். சபேசன் சிந்திக்க ஆரம்பித்தான்.

சாரதாவுக்கு நாட்டமில்லை.

சாரதாவைப் பொறுத்தவரை பிள்ளைகள் தன் சுதந்திர வாழ்வைக் கெடுத்துவிடும் என்ற பயம் இருந்தது.

இது சம்பந்தமாக பலதடவை இருவரும் வாக்குவாதப்பட்டுக் கொள்வதுண்டு.

ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருவரும் தத்தளித்தார்கள்.

சபேசனின் பொறுமையோ எல்லையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இருவருக்கும் இடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

முடிவில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

சாரதா ஒரு நிபந்தனை விதித்தாள்.

தனனை வேலையிலிருந்து நிறுத்தக் கூடாது என்பதுதான்.

சபேசன் ஒத்துக் கொண்டான்.

இதன் விளைவு மூன்று மாதத்தில் அவள் வயிற்றில் கரு வளரத் தொடங்கியிருந்தது.

சபேசன் அவளைப் பூப்போலப் பார்த்தான்.

பழம் பால் விற்றமின்கள் எல்லாம் அவர்கள் வீட்டில் தாராளமாக நுழைந்தன.

சாராதாவைப் பிள்ளையைப்போல் அன்பாகப் பார்த்தான்.

அவனின் கவனிப்பால் அவள் பெருமை கொண்டாள்.

அவனைக் கணவனாகத் தந்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறினாள்.

குழந்தை பூமியைப் பார்க்கும் நாளும் வந்தது.

சபேசன் உற்சாகத்தில் பறந்து கொண்டிருந்தான்.

அவள் பிரசவ வலியால் துடித்தபோது அவனும் துடித்தான். அவன் வேண்டாத கடவுளில்லை.

பிள்ளை பிறந்தது. சுகப்பிரசவம். தாயும் சேயும் நலம்.

கோயிலுக்கு ஓடிப்போய் அர்ச்சனை செய்தான் சபேசன்.

வைத்திய சாலையில் இருந்து மூன்றாம் நாளே வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

பெண் குழந்தை. பூரணி என்று பெயரிட்டார்கள்.

பிள்ளை தாய்ப்பாலை மறக்குமட்டும் அவள் வேலைக்குப் போகவில்லை.

சினத்தோடு வீட்டிலிருந்தாள். நித்தம் விவாதம் நடக்கும்.

மன அழுத்தத்துக்கு உள்ளானாள்.

பல நோய்கள் இவ் அழுத்தத்தால் அவளுக்கு வரத் தொடங்கின.

எந்த வைத்தியராலும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை.

ஈற்றில் கவுன்சிலிங் போகும்படி ஒரு வைத்தியர் கூறினார். அதையும் செய்தார்கள்.

முடிவு அவள் வேலைக்குப் போனால் எல்லாம் சரி என்றானது.

பிள்ளையைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல இடத்தைத் தேடினார்கள்.

பிள்ளையைக் காலையில் கொண்டுபோய் பிள்ளை பார்ப்பவர்களிடம் விட்டுவிடுவார்கள்.

மாலையில் திரும்பவும் பிள்ளையை வீட்டுக்குக் கொண்டுபோய் இருவரும் கொஞ்சி விளையாடுவார்கள்.

மீண்டும் இன்பமான வாழ்க்கை ஆரம்பமாகி இருந்தது.

இந்த இன்பமான காலம் நீளமாக இருக்கவில்லை.

இந்த இன்பமான வாழ்க்கைக் காலத்தில் அவர்களை அறியாமலே இரண்டாவது குழந்தை அவள் வயிற்றில் வளர ஆரம்பித்தது.

சாரதா திடுக்கிட்டாள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக அவள் தவித்தாள். சபேசன் தனக்குள் சந்தோசம் அடைந்தான்.

இந்தப் பிள்ளையை அழிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டினாள். சபேசன் அதற்கெதிராகப் போர்க்கொடி தூக்கினான்.

மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. வேதாளம் பழையபடி மரத்தில் ஏறிவிட்டது.

இவர்கள் இப்படிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போதே குழந்தை வளர ஆரம்பித்திருந்தது.

சபேசனின் பக்கம் வலுப் பெறத் தொடங்கியது. சபேசனே வென்றான். மீண்டும் வேலைக்குப் போவேன் என்று நிபந்தனை வைத்தாள்.

பிறகு பார்ப்போம் என்று அமைதியாக இருந்தான்.

இரண்டாவது குழந்தையும் அமைதியாகப் பூமியைத் தரிசித்தது.

பிரச்சினை மீண்டும் ஆரம்பமானது.

பிறந்த குழந்தையைச் சாரதா அறவே வெறுத்தாள்.

வேலைக்குப் போவேன் என்று அடம் பிடித்தாள். சபேசன் முடியாது என்று பிடிவாதமாக நின்றான். அவள் வேலைக்குப்

போவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது அவன் வாதம். இரண்டு பிள்ளைகளையும் பிள்ளை பார்க்கும் இடத்தில் விடுவதால் அவளின் முழுச் சம்பளமும் போய்விடும் என்ன பிரயோசனம் என்பது அவன் வாதம். பிள்ளைகளையும் ஒழுங்காக வளர்க்காமல் பணமும் இல்லாமல் இருப்பதில் அவன் உடன்பட மறுத்தான்.

ஒரு பெண் வேலைக்குப் போவது பணத்துக்காக மட்டுமே என்பது அவன் விளக்கம். அதற்கப்பால் அவளின் வாழ்க்கை ஒரு சந்தோச உலகத்துக்குச் செல்கின்றதென்ற நடைமுறை உண்மையை அவன் சிந்திக்க மறந்திருந்தான்.

நித்தமும் இதையிட்டுச் சண்டை.

பக்கத்து வீட்டுக்காரர்கள் எட்டிப் பார்ப்பார்கள். அவ்வளவுதான்.

அவளுக்கு மன அழுத்தம் அதிகமானது.

அவன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவள் வெறுக்க ஆரம்பித்திருந்தாள்.

அவன் எதை விரும்புகிறானோ அதை அழித்துச் சந்தோச மடைய ஆரம்பித்தாள்.

அவளின் இந்த நடவடிக்கைகளை சபேசன் கவனிக்கவில்லை.

அவள் அமைதியாக இருப்பதாகவே அவன் நினைத்தான்.

மன அழுத்தத்தால் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தாள்.

அவளின் செய்கைகளுக்கு அர்த்தங்களே இருக்கவில்லை.

சபேசன்மேல் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் விரும்பும் எல்லாவற்றையும் நாசஞ் செய்ய ஆரம்பித்தாள்.

அவள் கதைப்பதை முழுமையாக நிறுத்தினாள்.

அவன் ஒவ்வொரு நாளும் வேலையால் வந்து பிள்ளைகளோடு கொஞ்சிக் கொண்டிருப்பதை முறாய்த்துப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

அவன் பிள்ளைகள் மேல் கொள்ளைப் பிரியமாக இருப்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

பிள்ளைகள் அவளுக்கு உயிருள்ள உணர்வுள்ள ஜீவன்களாகத் தெரிவதில்லை. பதிலாக அவர்கள் அவளுக்கு அவன் மிக விரும்பும் பொருள்களாகவே தெரிந்தனர்.

அன்று அவன் வேலைக்குச் சென்றதும் பிள்ளைகளைக் கூப்பிட்டாள்.

அழகான அந்தப் பிள்ளைகள் ஓடி வந்து அவளைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சின.

அது அவளுக்குச் சந்தோசமான உணர்வாக இல்லை.

கண் மூடி முழிக்குமுன் பக்கத்தில் இருந்த கயிற்றை எடுத்துப் பூரணியின் கழுத்தைச் சுற்றி இறுக்கினாள். பூரணி வீல் என்று கத்தினாள். அவள் அந்த அழுகையைச் சபேசனைத் தண்டிப்பதாக எண்ணி சந்தோமடைந்தாள். இறுக்க இறுக்க பிள்ளையின் நாக்கு வெளியே வந்தது. பிள்ளையின் தலை தொங்கியது. தள்ளி விட்டுவிட்டு மற்றப் பிள்ளையை இழுத்து அதே மாதிரிச் செய்தாள்.

பிள்ளைகள் இரண்டினதும் சத்தங்கள் மெல்ல மெல்ல அடங்கின.

அவள் திருப்தி அடைந்து சாதாரண நிலைக்கு வந்தபோதுதான் பிள்ளைகள் நிலத்தில் கிடந்த பரிதாப நிலை அவளுக்குப் புரிந்தது.

கத்தினாள். ஓவென்று கத்தினாள். தொண்டை கிழியக் கத்தினாள். தாய்மை விழித்துக் கொண்டது.

என்ன செய்வதென்று அவளுக்கும் புரியவில்லை.

கயிற்றை எடுத்துத் தன் கழுத்தையும் இறுக்கினாள். உயிர் மெல்ல மெல்லப் பிரிந்து கொண்டிருந்தது.

அந்த மூன்று உயிர்களும் வீட்டை விட்டு மெதுவாக வெளியேறிக் கொண்டிருந்தன.

# அம்மாக்களும் பிள்ளைகளும்

**சு**தாமதி காலை எழும்பும் போதே எரிச்சலுடன் எழும்பினாள்.

உலகத்திற்குக் காலை விடிந்திருந்தாலும் அவளுக்கென்னவோ காலை விடியாதது போலவே இருந்தது.

அவளுக்கு வலப் பக்கத்தில் தாரிணி தூங்கிக் கொண்டிருந்தாள்.

தாரிணி சுதாமதியின் மகள். பதினொரு வயது.

லண்டன் மாநகரத்தில் பதினொரு வ்யதுப் பிள்ளைகள் படுகிறபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

அவர்களைப் பெற்றார் பிழிந்து எடுத்து விடுவார்கள். இந்த வயதில் அவர்கள் ஒரு முக்கியமான பரீட்சையைச் சித்தி எய்தியாக வேண்டும். அது ஒரு தகுதிகாண் பரீட்சை.

தரம் ஆறிலிருந்து தரம் ஏழிற்குச் செல்வதற்கான பரீட்சை.

தாயகத்தில் நடைபெறும் ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஒப்பானது.

ஐயாயிரம் ஆறாயிரம் பிள்ளைகள் பரீட்சை எடுப்பார்கள். இவர்களில் 500 பிள்ளைகளை மட்டுமே தேர்ந்தெடுப்பார்கள்.

பாவம் பிள்ளைகள்.

பிள்ளைகளைவிட அம்மாமார்தான் பாவம்.

இந்தப் பரீட்சை சித்தியெய்திவிட்டால் பிள்ளை தரமான பாடசாலைக்குச் செல்லலாம் அப்படிச் சென்றால் அவர்கள் வைத்தியராக வந்து விடலாம் என்று அம்மாமார் கனவு காணத் தொடங்கி விடுவார்கள்.

தாரிணியை எப்படியும் ஆளாக்கிவிட வேண்டும் என்பதில் சுதாமலர் குறியாகவே இருந்தாள்.

இந்தப் பரீட்சையில் அவளைச் சித்தி எய்த வைத்துவிட்டால் அவள் நல்ல பாடசாலைக்குச் சென்று விடுவாள். அப்படிச் சென்றால் டபிள் றிபிள் ரியூசன் கொடுத்து அவளை டாக்டர் ஆக்கி விடலாம் என்பது அவள் கனவு.

சுதாமதிக்கு மட்டுமல்ல புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு தாய்மாரின் கனவும் இதுதான்.

சுதாமதி மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு நிம்மதியாக அந்தக் குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிறது.

''என்னப்பா பிள்ளையையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' சுதாவின் கணவன் ஆனந்தன் கேட்டான்.

''இவளை ஆளாக்கிறதைப் பற்றித்தான் யோசிக்கிறன். இந்த முறை எப்பிடியும் பாஸ் பண்ண வைச்சிட்டனெண்டால் தப்பியிடுவாள்''

''பாவம் சின்னப் பிள்ளையப்பா. இந்த வயதிலை உப்பிடி நெருக்கிறது சரியாய்ப் படவில்லை''

''சும்மா விசர்க்கதை கதையாதையும். மறந்தும் அவளுக்கு முன்னாலை உப்பிடிக் கதைச்சுப் போடாதையும்.'' சுதாமதி கணவனைக் கடிந்து கொண்டாள். தாரிணி பாவம். சுதாமதி அவளை ரிவி கூடப் பார்க்க விடமாட்டாள். பள்ளிக் கூடத்தாலை வந்த உடனே ஒரு பயிற்சிப் பேப்பரைக் கொடுத்துச் செய்யடி என்பாள்.

தாரிணியும் சினத்தோடு ஏனோ தானோ என்று செய்வாள். திருத்தினால் அரைக்கரைவாசி பிழையாக இருக்கும். தாரிணிக்குப் பேச்சு விழும். பேச்சு சும்மா சாதாரணமாக இருக்காது. தாரிணிக்குத் தெரியாத பல சொல்லுகள் பேச்சினில் இருக்கும்.

''அவள் கனகாவின்ரை பெட்டை நூற்றுக்குத் தொண்ணூறு எடுக்கிறாளாம். உனக்கு மட்டும் சரிவராதாம்.'' என்டு ஒப்பிட்டுச் சத்தம் போடுவாள்.

கனகா சுதாமதியின் நண்பி. பால்ய காலத்து நண்பியல்ல. தாரிணியைப் பள்ளிக்கூடத்திலை விடப் போகும்பொழுது உருவான நட்பு.

இருவருக்கிடையிலும் மறைமுகமாகப் போட்டி.

ஒருக்கால் அவள் சுதாமதியிடம் தன் பிள்ளை ஒரு நாளைக்கு ஐந்து பேப்பர் செய்யிறதெண்டும் ஆகக் கூட இரண்டு பிழைதான் விடுவாளெண்டும் கூறியது ஞாபகத்துக்கு வந்தது. அந்தச் செய்தி சுதாமதியின் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

இண்டைக்குத் தாரிணி அரைக்கரைவாசி பிழைவிட எல்லாம் சேர்ந்து சுதாமதியை பத்ரகாளியாக்க புத்தகம் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு...

''இண்டைக்கு உனக்குச் சாப்பாடு இல்லையடி.. எக்கேடும் கெட்டுப்போ'' என்று கத்தினாள்.

தாரிணி பாவம் பயந்து நடுங்கி அழுது கொண்டிருந்தாள். அப்போதான் வீட்டுக்குள் வந்த ஆனந்தன் நிலைமையைப்

புரிந்து கொண்டான். தாரிணி ஓடிப்போய் தகப்பனைக் கட்டிப் பிடித்து ஓவென்று கதறினாள்.

"ஏனப்பா உனக்கென்ன விசரே. இந்தப் பச்சிளங் குழந்தையை உப்பிடிப்போட்டுச் சித்திரவதை செய்யிறாய்"

"ஓ! வந்திட்டார் வக்காலத்து வாங்க. நான் விரும்பித்தானே சித்திரவதை செய்யிறன். எனக்குப் பிள்ளையிலை பாசம் இல்லைத்தானே. உந்தச் சனியன் ஒழுங்காய்ச் செய்தால் நான் ஏன் அடிக்கிறன்."

"பிள்ளைக்கு விளங்கினால் செய்யும்தானே அப்பா. அதை ரியூசனுக்கு விடெண்டால் விடாயாம் அப்ப அது என்ன செய்யிறது?"

"அவள் அந்தச் சிறுக்கி கனகா ஆரிட்டை படிக்கப் பிள்ளையை அனுப்பிறாள் எண்டு சொல்லாளாம். ஏதோ பரமரகசியத்தைப் போல பாதுகாக்கிறாள்."

மனைவியின் இந்த பத்திரகாளித்தனத்தையும் அறிவிலித் தனத்தையும் தடுக்கமுடியாத பாவியாக தாரிணியை அணைத்துக் கொண்டு நின்றான் ஆனந்தன். தாரிணியைப் பார்த்து "ஏனம்மா பிழை விடிறாய்?" என்று தாரிணியைப் பார்த்து ஆனந்தன் கேட்டான்." எனக்கு விளங்கயில்லை யப்பா? என்று அவள் சொல்ல ஆனந்தனுக்கு அழுகை

வந்துவிட்டது. அவனது கண்கள் குளமாகிவிட்டது. இவர்கள் இருவரினதும் நிலையைப் பார்த்த சுதாமதிக்குக் கோபம் போய் அழுகை வந்துவிட்டது. கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது. அவள் அம்மாவாச்சே! தாரிணி தாய்க்குப் பக்கத்தில் வந்து அவளின் கண்ணீரைத் துடைத்து இனிமல் பிழைவிட மாட்டனம்மா என்ற போது சுதாமதி அவளைக் கட்டிப்பிடித்து அழுதாள். வீடே சோகமயமாக இருந்தது.

''இஞ்சரப்பா பிள்ளைக்கு விளங்கயில்லை எண்டால் ரியூசனுக்கு விடுவமே!'' என்றான் ஆனந்தன்.

''விடத்தான் வேணுமப்பா. சரியான இடமும் வேணும். அவள் கனகா தன்ரை பிள்ளையை எங்க விடிறாளெண்டு கேட்டால் சொல்லாளாம். நான் நினைக்கிறன் அந்த வெள்ளையள் படிப்பிக்கிற இடத்துக்குத்தான் விடிறாள் போல கிடக்குது.''

''ஏனப்பா உந்தத் தமிழாக்கள் படிப்பிக்கிற இடத்துக்கு விடுவமே.?''

''கொஞ்சம் பொறுங்கோ உவள் சுந்தரிக்கு அடிப்பம்'' என்று கூறிவிட்டு தன்னுடைய இன்னொரு நண்பிக்கு தொலைபேசி எண்களைச் சுழற்றினாள்.

சுந்தரி கொஞ்சம் நல்லவள். எரிச்சல் குணமில்லை. சுந்தரி லைனில் வந்தாள்.

''இதுக்கேனப்பா உவ்வளவு கவலைப்படிறியள் என்ரை மூத்தவன் தமிழ் ஆக்கள் நடத்திற ரியூசனுக்குத்தான் போனவன். நல்ல புள்ளி எடுத்துப் பாஸ் பண்ணினவன்.''

சுதாமதி ஒன்றும் சொல்லவில்லை.

''சரியப்பா நான் யோசிச்சுச் செய்யிறன்'' என்று சொல்லி போனை வைத்துவிட்டாள்.

சுந்தரி சொல்கிற இடம் சுதாமதியின் வீட்டிலிருந்து பத்து நிமிடம்தான்.

''என்னவாமப்பா சுந்தரி''

''அவள் உந்தத் தமிழ் ஆக்களின்ரை இடத்துக்கு அனுப்பச் சொல்லிறாள்.''

''அதுக்கென்னப்பா அனுப்புவமப்பா. எங்களுக்கும் கட்டுப்படி யாகும். பக்கத்திலை இருக்குது.''

''உங்களுக்கென்ன விசரே.. மூளை இல்லாமல் கதைக்கிறியள். நான் எப்பிடியும் பிள்ளையை வெள்ளையள் படிப்பிக்கிற இடத்துக்குத்தான் கொண்டு போவன்.''

''அந்த இடம் சரியான தூரமெல்லே.. காசும் கூடவாம். எங்களுக்குக் கட்டுப்படியாகாது. ஒரே விசயத்தைத்தானே

இஞ்சையும் படிப்பிக்கினம். ஏன்தான் உப்பிடிப் பிடிவாதம் பிடிக்கிறீரோ தெரியேல்லை''

''நீர் ஒரு ஆம்பிளையே.. கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாமல் கதைக்கிறியள். பிள்ளையைப் படிப்பிக்கிறதெண்டால் ஒரு வேலைக்கு இரண்டு வேலை நீர் செய்ய வேணும். அவள் கனகாவின்ரை புருசன் மூண்டு வேலையாம். அவன் மனிசன். எல்லா இடமும் ஒண்டுதான் படிப்பிக்கினம் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் கனகாவுக்கு நான் குறைஞ்சு போகேலாது.''

''ஆக உனக்கிப்ப உன்ரை பிள்ளையைவிட கனகாவுக்குக் குறையேலாது எண்டதுதான் முக்கியம்.''

இந்தக் களேபரம் நடக்கும்போது தாரிணி தூங்கிப் போயிருந்தாள்.

''நான் அவங்களுக்குப் போன் பண்ணினனான்.. அங்க இடமில்லையாம்.. வெயிட்டிங் லிஸ்டிலை போட்டிருக்கி றான்கள்.. அவங்கள் போன் பண்ணுமட்டும் வேறை ஒரு இடமும் விடமாட்டன்''

''உனக்குக் கொஞ்சமும் அறிவில்லை.. பாஸ் பண்ணக்கூடிய பிள்ளையைப் பெயில் பண்ணச் செய்யிறாய் .. உங்க தமிழ் ஆக்கள் படிப்பிக்கிற இடத்திலைவிட்டுக் கனபிள்ளையள் பாஸாம்..''

''இப்ப புது சிலபசப்பா தமிழ் ஆக்களுக்கு அதெல்லாம் தெரியாது.. எனக்கு விசர் வரப் பண்ணாமல் உங்கடை அலுவலைப் பாருங்கோ..''

''ஏதோ இப்ப தெளிவாயிருக்கிற மாதிரி..'' ஆனந்தன் முணுமுணுத்தான்.

சுதாமதி எழும்பிப் போய்விட்டாள்.

ஆனந்தன் தலையை ஆட்டிக் கொண்டு ரிவியை ஓன் பண்ணினான்.

***

அந்தப் பாடசாலைக்கு முன்தான் தாய்மார்கள் கூடுவார்கள். அங்கேதான் பலவித செய்திகள் பரவும். பலவித முடிவுகளும் எடுக்கப்படும். பலவித முறிவுகளும் சண்டைகளும் இங்கே தான் ஆரம்பமாகும்.

சுந்தரி வந்து சுதாமதியின் தோளில் தட்டி

''என்ன சுதா எங்கை பிள்ளையை அனுப்பிறாய் இப்ப''

''இன்னும் முடிவெடுக்கவில்லையப்பா''

''ஏனப்பா என்ரை மூத்தவனும் அங்கை படிச்சுத்தான் பாஸ் பண்ணினவன்'' என்றாள் சுந்தரி.

''அது இல்லையப்பா.. இப்ப புதுச் சிலபஸாம் (syllabus) வெள்ளையள்தான் நல்லாய்ப் படிப்பிப்பினம்''

சுந்தரி எவ்வளவு சொல்லியும் சுதாமதி கேட்கிறதுக்குத் தயாராயில்லை. அவளுக்கு எல்லாம் விளங்கும். சுந்தரியின் விளக்கங்களை அவள் உள் மனம் ஏற்றுக் கொண்டாலும் அவளின் அடிமனதில் கனகா பிள்ளையைப் படிப்பிக்கிற இடத்தில்தான் தன்ரை பிள்ளையும் படிக்கவேண்டும் என்ற பிடிவாதம் தேங்கி இருக்கிறது. அதிலிருந்து அவளால் வெளியில் வரமுடியவில்லை என்பதுதான் உண்மை.

''மெய்யே சுந்தரி கனகா மகளை எங்கை விடுகிறாள். உனக்குத் தெரியுமே?''

''இல்லையப்பா.. அவளின்ரை விசயத்தை அவள் ஆரோடை யும் கதைக்கிறதில்லை. தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவள்.''

கனகா கொஞ்சம் வித்தியாசமானவள். யாருடைய விசயத் தையும் நுழைஞ்சு நுழைஞ்சு கேட்கமாட்டாள். அதே மாதிரி தன் விசயங்களையும் யாருக்கும் சொல்ல மாட்டாள். பள்ளிக் கூடத்துக்கு முன்னால் நடக்கும் அலசல் மாநாட்டிலும் கலந்து கொள்ள மாட்டாள். தன்னுடைய வருமானம் தன்னுடைய

கணவன், பிள்ளை. இதற்கு மிஞ்சி அவள் எதனையும் சிந்திப்பதில்லை.

சுதாமதி தாரிணியையும் கூட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள்.

''அம்மா இண்டைக்கு எனக்கு விளங்காததை விளங்கப் படுத்திறியளே?'' என்று தாரிணி கேட்டாள்.

''எனக்கும் தெரியாதம்மா. இன்னும் சோதினைக்கு இரண்டு மாதம்தான் கிடக்குது. உனக்குத் தெரிந்த கேள்விகளை நீ பயிற்சி செய்யம்மா. எப்பிடியும் இந்தக் கிழமை உன்னை ரியூசனிலை சேர்ப்பன்.'' என்று கூறி தாரிணியைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினாள்.

வீட்டுக்கு வந்ததும் தொலைபேசி எடுத்துத் தூரத்திலிருக்கிற அந்த ரியூசன் நிலையத்துக்கு போன் பண்ணினாள்.

அவளுக்கு நல்ல செய்தி கிடைத்தது. அவளின் முகம் மலர்ச்சி அடைந்தது.

உடனே கணவனுக்குத் தொலைபேசி எடுத்தாள்.

''இஞ்சரப்பா. தாரிணிக்கு இடம் கிடைச்சிட்டுது. ஒரு இடம் இருக்காம். இரண்டாயிரம் உடனே கட்டட்டாம். இல்லாட்டில் வேறை பிள்ளைக்குக் குடுத்திடுவினமாம்.''

''உமக்கென்ன விசரே. இரண்டாயிரத்துக்கு நான் எங்கை போறது.''

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது. வரேக்கை இரண்டாயிரத் தோடை வாறியள்.'' என்று கூறிவிட்டு ஆனந்தனின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் போனை வைத்துவிட்டாள்.

ஆனந்தனுக்குத் தலைசுற்றியது.

சுதாவின் நினைப்பு கனகா அங்கைதான் தன்ரை பிள்ளையை விடிறாளெண்டு.

கனகா பிடிபடப்போறாளெண்டு மனதுக்குள் சுதாமதியின் உள்ளம் துள்ளிக் குதித்தது.

ஆனந்தன் நண்பர்களோடு தொடர்பு கொண்டு கெஞ்சாத குறையாய்க் கெஞ்சி ஒருமாதிரி பணத்தைப் பிரட்டியிட்டான்.

***

பணம் தேடியாகி விட்டது.

பணத்தையும் கொண்டு ஆனந்தனும் சுதாமதியும் தாரிணியும் அங்கே சென்றனர்.

பணத்தைக் கட்டித் தாரிணியைச் சேர்த்தாயிற்று.

சுதாமதிக்கு நல்ல திருப்தியும் சந்தோசமும்.

எப்பிடியோ கனகாவின்ரை பிள்ளை படிக்கிற இடத்திலை என்ரை பிள்ளையையும் சேர்த்தாயிற்று என்ற சந்தோசத்தில் ஆறுதலாகப் பெருமூச்சு விட்டாள் சுதாமதி.

இந்தச் சந்தோசத்தோடு அந்தத் தமிழ் ஆக்களின் கல்வி நிலையத்திற்கு முன்பாக மிடுக்கோடு சென்று கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்துக் கனகா தன் பிள்ளையோடு அந்தக் கல்வி நிலையத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

சுதாமதிக்குத் திக்கென்றது.

ஆனந்தனும் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

அவன் மனைவியை ஒரு பார்வை பார்த்தானே! அப்படி ஒரு பார்வையை சுதாமதியால் தாங்க முடியுமா?

பாவம் சுதாமதி தோற்றுப் போய்விட்டாள்.

## லண்டன் நகரத்து வீதிகளில்

நிலைமை விபரீதமாகுமென்று யாருமே நினைத்திருக்க வில்லை. சிறிய சம்பவம்தான். வாக்குவாதம் வாய்ச் சண்டை யோடு நின்றிருக்கவேண்டும். ஆனால் அது கைகலப்பில் தொடங்கி விபரீதமான எல்லைக்குச் சென்று விட்டது.

இதற்கான காரணகர்த்தா சடுதியாக மறைந்து விட்டார்.

கமலன் அகிலன் சிவந்தன் மூவரும் தலையில் கை வைத்துக் கொண்டிருந்தனர்.

''நீ அந்தக் கதையை தொடங்காமல் விட்டிருக்கலாம்''

என்று கமலன் சொன்னான்.

''நான் என்ன வேணுமெண்டே சொன்னனான். அவன் கதைச்ச கதைக்கு மறுப்பாய்த்தான் சொன்னனான்.'' என்றான் அகிலன்.

''இல்லை மச்சான் நான் கவனிச்சனான்.. நீதான் முதலிலை தொடங்கினனீ '' என்றான் கமலன்.

''அப்ப உன் கதையைப் பார்த்தால் நான்தான் எல்லாத்துக்கும் காரணம் எண்டமாதிரியெல்லோ இருக்குது'' சூடாகத்தான் கதைத்தான் அகிலன்.

''இப்ப நீங்கள் ரண்டு பேரும் ஏன்ராப்பா அடிபடிறியள். இருக்கிற பிரச்சினை காணாதெண்டு பிறகும் கிண்டிறியள்.

மற்ற இருவரும் வாயை மூடிக் கொண்டனர்.

''ஊரிலை ஒரு சிங்கள ஆமியை வெட்டினாலும் பிரயோசனம். இஞ்சை வந்து எங்கடை இனத்தவனையே வெட்டிப் போட்டு இருக்கிறம். கேடு கெட்ட வாழ்க்கை மச்சான்.''

சிவந்தன் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டினான்.

''என்ன மச்சான் நீ சேம் சைட் போடிறாய்.''

கமலன் கோபமாகவும் கிண்டலாகவும் சிவந்தனைப் பார்த்துக் கூறினான்.

சிவந்தன் எதுவும் கூறவில்லை.

''நடந்ததைப் பற்றிக் கதைத்துப் பிரயோசனமில்லை. ஆர் கூட ஈடுபட்டதென்று அலசிறதிலையும் அர்த்தமில்லை. மூண்டு

பேரும் சேர்ந்துதான் செய்தனாங்கள். வாறதை மூண்டு பேருமே அனுபவிப்பம்'' என்றான் அகிலன்.

''இப்ப என்ன செய்யிறதெண்டதைப் பற்றிக் கதைப்பம்.'' என்றான் கமலன்.

''ஓ.. இப்ப ஒரு ஆமிக்காம்ப் தானே அடிச்சிருக்கிறம் அடுத்த திட்டத்தைப்போட'' என்றான் நையாண்டியாக சிவந்தன்.

கமலனுக்குக் கோபம் வந்துவிட்டது. அடக்கிக் கொண்டான்.

அகிலனது வாய் சில தகாத சொல்லுகளை முணுமுணுத்தது.

சிறிது நேரம் மௌனம்.

இவர்கள் மூவரையும் தேடி இன்னும் சில நிமிடங்களில் லண்டனது காவற்றுறை வரப்போகிறது. வழக்கமாக இப்படியான சந்தர்ப்பங்களில் இளவட்டங்கள் ஓடி ஒளிந்து விடுவார்கள். வழமைக்கு மாறாக இம் மூவரும் பேசாமல் இருந்தனர். அதற்காக இவர்கள் திருந்தி விட்டார்களென்றோ அல்லது நல்லவர்களென்றோ அடையாளப் படுத்திவிட முடியாது.

இவர்களுக்கு இப்படியான சந்தர்ப்பங்கள் ஒன்றும் புதியன வல்ல. லண்டன் காவற்றுறை இவர்களுக்கு அத்துப்படி. ஓடி ஒழிவது அர்த்தமற்றதென்றே நினைத்தார்கள்.

இம்முறை இவர்கள் செய்தது ஒன்றும் சின்னக்காரியமல்ல. சின்னச் சின்னக் காரியங்களாகத் தொடங்கி இன்று பெரிய காரியத்தைச் செய்து விட்டு நிற்கிறார்கள்.

கடல் கடந்து தஞ்சம் கேட்டு ஒரே பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதைத்தவிர எவ்விதமான உறவு முறையும் இவர்களுக் கிடையில் இல்லை.

குணத்திலும் இவர்கள் ஒன்றுபட்டவர்கள் என்று கூற முடியாது.

வித்தியாசமான குணங்களைக் கொண்ட இவர்கள் தாம் வதியும் இந்த இடத்தின் சண்டியர்களாக தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொண்டவர்கள்.

இதற்கேற்ற விதமாக தம் உடைகளை மாற்றிக் கொண்டார்கள்.

இவரர்களுடைய உடுப்பில் வர்ணங்கள் கூடுதலாக இருக்கும். கழுத்தில் மூன்று நான்கு வெள்ளிச் சங்கிலிகளைப் போட்டிருப்பார்கள். அந்த வெள்ளிச் சங்கிலிகள் மிகத் தடிப்பானவையாக இருக்கும். காதுகள் இரண்டிலும் பெரிய கடுக்கன்கள். ஊரில் பழைய ஆச்சிமார் போட்ட மாதிரி இருக்கும். அவர்களது கண்ணிமைகளில் கூடச் சிறுசிறு வெள்ளி வளையங்கள் தொங்கிக் கொண்டிருக்கும்.

கார் ஓட்டும்போது ஒரு பக்கம் சரிந்திருந்தே ஓட்டு வார்கள். தங்களுக்கென்று சில ஆயுதங்களையும் தேடிக் கொண்டார்கள். ஆயுதங்கள் எப்போதும் அவர்களது காரின் பின் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். எப்படியும் இரண்டு மூன்று வாள்கள் மொத்தச் சங்கிலிகள் தடிப்பமான மரச் சட்டங்கள் கோடரிகள் என்று வைத்திருப்பார்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி ஆயுதங்களைப் பாவிப்பார்கள். இதில் என்னவென்றால் இந்த ஈனத் தொழிலை தாமாக வலிந்து ஏற்றுக் கொண்டவர்களல்ல.

சில வேளைகளில் விரக்தியடைந்து இந்தத் தொழிலை விட்டு விடுவோமடா என்று மூன்றுபேரும் சில சமயங்களில் சிந்தித்த நாட்களுமுண்டு.

ஆனால் அவர்கள் விரும்பினாலும் இந்தச் சமூகம் அவர்களை விடாது துரத்தும். அவர்களை அவர்களின் செயல்களுக்காக தும்பு பறக்க விளாசித் தள்ளும் இந்தச் சமூகம் அவர்களை இதிலிருந்து விடுபடவும் விடாது பற்றிக் கொண்டிருப்பதும் இயல்பாகவே நடக்கிறது.

வியாபார உலகில் பல தமிழர்கள் லண்டனில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்த முதலாளிகளுக்கிடையில் முரண்பாடுகள் போட்டிகள் ஏராளம். இந்த முரண்பாடுகளின்

வெளிப்பாடுகளாக இவ் இளைஞர்களை அடியாட்களாக அமர்த்தும் செயல் வெற்றிகரமாக நடக்கிறது.

கை நிறையப் பணம் நாலு பேரை அடித்து நொறுக்குவதற்குக் கிடைக்கிறதென்றால் யார்தான் விடப்போகிறார்கள்.

இந்தத் தொழிலுக்கு ஒரு அசாத்திய கௌரவமும் உண்டு. இவர்களைக் கண்டால் எல்லோரும் ஒதுங்கிப் போவார்கள். இதில் இவர்களுக்கு மிகப் பெரிய சந்தோசம்.

கமலன் எழுந்துபோய் ஒரு கிளாசில் தண்ணீர் வார்த்துக் குடித்தான். தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும்போது மேசையில் கிடந்த கடிதம் அவன் கண்களில் பட்டது.

நேற்றுத்தான் அந்தக் கடிதம் வந்திருக்க வேண்டும்.

தம்பி கமலனுக்கு

சுகமாய் இருக்கிறியா? இங்கை அப்பாவுக்கச் சரியான வருத்தம். நெஞ்சிலை சளியென்று டாக்குத்தர் சொன்னவர். இங்கை வைத்திய வசதியளும் குறைவென்று உனக்குத் தெரியும் தானே. இனிமல் யாழ்ப்பாணம்தான் போகவேணும். தங்கச்சி சோதினை நல்லாய்ப் பாஸ் பண்ணியிட்டாள். இங்கை சூழ்நிலை அவ்வளவு சரியில்லை. சரியான பயம். சிலவுக்குக் கையிலை காசொண்டும் இல்லை. தங்கச்சியின்ரை கதையைப் பார்த்தால் இயக்கத்திலை சேர்ந்திடுவாள் போலை

கிடக்குது. நீ என்ன செய்யிறாய். முடிஞ்சால் கொஞ்சம் காசு அனுப்பி வை.

இப்படிக்கு
அம்மா

கடிதத்தை வாசித்த கமலனின் கண்கள் கலங்கின.

கமலன் கண் கலங்குவதைப் பார்த்த சிவந்தன் எழும்பி அவன் அருகில் வந்தான்.

''என்ன மச்சான்.. அம்மா காசு அனுப்பட்டாமே?'' என்றான்.

''ஓம் மச்சான் இந்த முறை உள்ளுக்கை போனால் வாறனோ தெரியாது. அம்மா பாவம். தங்கச்சியும் இயக்கத்திலை சேரப் போறாளாம். அப்பாவுக்கும் சரியான வருத்தமாம்.'' என்றான் கமலன்.

சிவந்தன் எதுவும் பேசவில்லை.

''இந்த நாசம் பிடிச்ச வேலையைச் செய்யாமல் சும்மா சுப்பர் மார்க்கட்டிலை வேலை செய்திருக்கலாம்.'' என்று சினந்தான் அகிலன்.

''நாங்கள் தேவையில்லாமல் ஆற்றையேனும் பிரச்சினைக் காகத் தெரியாத ஆரையோ அடிக்க .. சீ என்ன பிழைப்பு..'' சிவந்தன் விரக்தியின் எல்லைக்கே போய்விட்டான்.

''நாங்கள் கொலை செய்யிற அளவுக்குப் போயிருக்கக் கூடாது.'' என்றான் கமலன்.

''ஆர் நினைச்சது இப்படி நடக்குமெண்டு'' அகிலன் கூறினான்.

'' நாங்கள் செய்ததெண்டு ஆருக்குத் தெரியும்.'' என்றான் சிவந்தன்.

''நல்ல கதை கதைக்கிறாய். எங்களை ஒழுங்கு செய்த முதலாளியே பொலிசுக்கு அடிச்சுச் சொல்லியிருப்பான்.'' கமலன் முணுமுணுத்தான்.

தொலைபேசி அடித்தது. மூவரும் இது பொலிசாய் இருக்குமோ என்று நினைத்துப் பேசாமலிருந்தார்கள்.

தொலைபேசி நின்று விட்டது. மீண்டும் அடித்தது.

சிவந்தன் துணிவாய் எடுத்தான்.

மறுமுனையில் பெண்ணின் குரல். சிவந்தனின் காதலி.

"என்ன சிவந்தன் நான் கேள்விப்பட்டது உண்மையே?"

"என்ன கேள்விப்பட்டனீர்?"

"அந்த ராசதுரையை ஆரோ நடு றோட்டிலை வைச்சு வெட்டிப் போட்டாங்களாம்."

"அப்பிடியே" சிவந்தன் காட்டிக் கொள்ளவில்லை.

‘‘என்ன அப்பிடியே என்கிறீர். சனங்கள் உம்மடை காங் என்று தானே கதைக்கினம்’’

‘‘சும்மா விசர்க் கதை கதையாதையும். ஆரும் செய்தால் எல்லாம் நாங்களே.’’

சிவந்தன் விட்டுக் கொடுக்காமல் கதைத்தான்.

‘‘நான் எத்தனை முறை சொன்னனான் உந்த அடிதடியிலிருந்து வெளிய வாருமெண்டு. கேட்டீரே. உம்மடை அண்ணன்மார் கேள்விப்பட்டால் எவ்வளவு கவலைப்படுவினம்.’’

‘‘போனை வையும். நான் நேரிலை வந்து எல்லாம் கதைக்கிறன்.’’

‘‘ம்...நேரிலை வந்தால் பார்ப்பம்’’

அவள் போனை வைத்துவிட்டாள்..

‘‘ஆர் மச்சான் லவ்வரே’’ கமலன் கேட்டான்.

‘‘ம்...சனங்கள் வெளியிலை நாங்கள் செய்ததெண்டுதான் கதைக்குதுகளாம்.’’ என்றான் சிவந்தன்.

‘‘அப்ப எப்படியும் பொலிசுக்கு விசயம் போயிடும். இப்ப வருவாங்கள்’’ என்றான் அகிலன்.

கதவு தட்டிச் சத்தம் கேட்டது.

மூவரும் ஆளை ஆள் பார்த்தனர்.

பொலிசாயிருக்குமோ!

''அகிலன்...அகிலன்'' என்று கூப்பிடும் குரல் கேட்டது.

அகிலன் போய் கதவைத் திறந்தான்.

அகிலனின் அண்ணா தயானந்த மூர்த்தி நின்றிருந்தார். அவரை உள்ளுக்கு விட்டு கதவைச் சாத்தினான்.

தயானந்த மூர்த்தியின் முகம் இறுகிக் கறுத்திருந்தது.

தயானந்த மூர்த்தி சமூகத்தில் கௌரவமாக வாழ்ந்து வருபவர்.

பிரபல கணக்காளர். அவருக்கு இப்படியொரு தம்பி.

எத்தனை தடவை புத்திமதி சொல்லியிருப்பார்.

அவன் கேட்டு நடந்ததாகச் சந்தர்ப்பமே இல்லை.

இப்போ மனங் கேட்காமல் வந்திருக்கிறார்.

''இப்ப என்ன செய்யப் போறியள்?''

பதிலில்லை.

''எத்தனை முறை சொல்லியிருப்பன் கேட்டியளே?''

யாருமே பதிலளிக்கவில்லை.

''இப்ப முழுசி என்ன பயன். வெள்ளம் தலைக்கு மேலை போயிட்டுது. அந்த ராசதுரையர் உங்களுக்கு என்ன செய்தவர்? அவர் மனிசியும் பிள்ளையளும் போடிற சாபம் உங்களை விடாது.''

யாரும் பதிலளிக்கவில்லை.

''ராசதுரையைக் கொல்லச் சொன்ன முதலாளி உங்களை இப்ப வந்து காப்பாத்துவாரே?''

மூவரும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டனர;.

''எனக்கு இப்ப என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை.'' என்று தயானந்த மூர்த்தி கூறியபோது அவர் கண்களில் கண்ணீர் பொலபொலவென்று வழிந்தோடியது. சிறிது நேரம் அகிலனையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அவர் அப்படியே வெளியே சென்றுவிட்டார்.

அவர் சென்ற சில நிமிடங்களில் மீண்டும் கதவு தட்டப்பட்டது. சிவந்தன் போய் கதவைத் திறந்தான்.

வெளியே பொலிசார் நின்றிருந்தனர்.

## ஜெர்மானிய வீடுகளில்...

“வாருங்கோ பூமணி.. எங்கை கன நாளாய் காணல்லை” என்று வீட்டுக்குள் வந்து கொண்டிருந்த பூமணியை மலர் வரவேற்றாள். பூமணியும் வந்து அமர்ந்தாள். அவளின் கண்கள் ஒரு தடவை வீட்டு நிலம் தொடக்கம் சுவர் வரை ஆராய்ந்தது.

“என்ன பாரும் சுவருக்குப் பேப்பர் எல்லாம் ஒட்டியிருக்கிறீர். என்ன சோசலே காசு தந்தது” என்றாள் பூமணி.

“பின்ன.. எங்கடை காசிலேயே செய்யிறது.. எல்லாம் அவங்கடைதான்.. உம்மடை அவர் இப்ப வேலை செய்யிறாரே.. எங்கடை இவர் ஒரு றெஸ்ட்ரோறன்ரிலை இரண்டு நாள் வேலை செய்யிறார்..” என்று மலர் சொன்னாள்.

பூமணி எதுவுங் கூறவில்லை. மனதுக்குள் மனிசன் செய்யிற வேலையைச் சொல்லக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

ஆனால் மலர் விட்டபாடாக இல்லை.

''மெய்யே சொல்லுமன்.. உம்மடை அவர் வேலை செய்யிறாரே'' என்று விடுத்துவிடுத்துக் கேட்டாள் மலர்.

''எங்கபாரும் வேலை செய்யிறது. அவரும் றை பண்ணுறார் கிடைக்க வேணுமே...'' என்று கூறித் தப்பிக் கொண்டாள்.

''கேட்கிறன் எண்டு குறை நினையாதையும் எவ்வளவு இப்ப சேர்த்திட்டீர்... எங்கட சனமெல்லாம் பத்துப் பதினைஞ்சு சேர்த்திட்டுதாம்..'' என்றாள் மலர். ''இவளென்னடா விவஸ்தை கெட்டவளாய் இருக்கிறாளே'' என்று மனதுக்குள் பூமணி நினைத்துக் கொண்டாள்.

இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது மலரின் மூத்த மகள் வாணி உள்ளே வந்தாள்.

''வாணி இப்ப பள்ளிக்கூடம் போறவளே?'' என பூமணி கேட்டாள்.

''ஓம் பாரும் அவள் இப்பவே டொச்சிலை வெளுத்து வாங்கிறாள். எனக்குக் கூடச் சிலவேளை விளங்கயில்லை எண்டால் பாருமன்'' என்று மலர் பெருமை கொண்டாள்.

''வாணி கொம கிய'' (வாணி இங்கை வா) என்று மகளை மலர் கூப்பிட்டாள்.

''வஸ் மமா'' (என்ன அம்மா) என்றபடி வாணி வந்தாள்.

''ஏன் மலர் வாணிக்குத் தமிழ் தெரியாதே''

''தெரியும். சும்மா தெத்தித் தெத்திக் கதைப்பாள்.''

''எதுக்கும் தமிழையும் படிப்பிச்சு வையுங்கோ... இல்லாட்டி ஊருக்குப்போய் கஸ்டப்படவேண்டி வரும்''

''ஊருக்கு ஆரப்பா போறது. எங்கடை இவர் இஞ்சை வந்து எட்டு வருசமாச்சு. இமிக்கிறேசன் கிடைக்கும். பிறகென்ன ஊர்'' என்றாள் மலர்.

பூமணி எதுவும் பேசவில்லை.

மலர் தேனீர் போட உள்ளே போய்விட்டாள்.

வாணி பூமணிக்கருகில் வந்திருந்தாள்.

''வாணி தமிழ் ஸ்கூலுக்குப் போறனியே.''

அவள் பேசாமலிருந்தாள். அவளுக்கு விளங்கியது பூமணிக்குப் புரிந்தது. ஆனால் பதில் சொல்ல தமிழ் வரவில்லை.

பூமணிக்கு என்னவோ போலிருந்தது.

மலர் தேனீரோடு வந்தாள்

''பூமணி கடைசியாய் என்ன படம் பார்த்தனீர்?''

''இப்ப கனநாளாய்ப் படம் பார்க்கயில்லை. எங்கை நேரம்..'' என்று கூறியவாறு தேனீரை அருந்தினாள்.

''மலர் நாங்கள் ஒரு பரதநாட்டிய வகுப்புத் தொடங்கலா மென்றிருக்கிறம். மகள் வருவாவோ?''

''டான்சோ!.. சும்மா விசர் வேலையெல்லாம் செய்யாதையும்... வாணிக்கு நான் வெஸ்ரேண் டான்ஸ் படிப்பிக்கப்போறன்''

பூமணிக்கு என்னவோ போலிருந்தது.

பூமணியாகட்டும் மலராகட்டும் சின்னஞ் சிறு பிஞ்சான வாணியை கேட்கவேண்டும் என்று கொஞ்சமும் நினைக்கவே யில்லை.

வாணி ஒரு மூலையிலிருந்து இருவரையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வாணி மனதுக்கள் குமைந்து கொண்டிருந்தாள்.

இண்டைக்கு கிண்டர் காடினிலை என்ன நடந்ததெண்டு யாரும் கேட்க மாட்டார்களாவென ஏங்கிக் கொண்டிருந்தாள்.

''ஏன் வாணி ஒரு மாதிரி இருக்கிறீர்'' என்றாள் பூமணி.

வாணிக்கு விளங்கவில்லை. பேந்தப் பேந்த விழித்தாள். இதைப் புரிந்து கொண்ட பூமணி டொச்சில் கேட்டாள்.

வாணியின் முகம் மலர்ந்தது.

ஏதோ சொல்வதற்காக அவள் தொடங்க அதற்குள் மலர்

''அது வேறொன்றுமில்லை. அங்கே ஒரே படிப்புத்தானே. இவளும் சரியான ஆர்வம் அதிலை களைச்சுப் போனாளாக்கும். கண்ணை மூடிக் கொண்டு வீட்டு வேலை குடுக்கிறான்கள்.'' என்று மலர் முடித்தாள்.

'எல்லாவற்றிலும் பெருமை சொல்வதில் மலர் ஒரு தனி ரகம்' என்று பூமணி மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

''இஞ்சர் பூமணி மொம்மை புத்தகம் வாசிச்ச நீரே?'' என்று கூறியவாறே புத்தகத்தைத் தேடினாள்.

''வாணி வோ இஸ் தஸ் புக்'' என்று வாணியைப் பார்த்துக் கேட்டாள்.

இப்படிக் கேட்டுவிட்டு கடைக்கண்ணால் பூமணியைப் பார்த்தாள்.

வாணி பதில் கூறவில்லை. பேசாமல் போய்விட்டாள்

''உது சனியன் சின்னனென்டாலும் தகப்பனைப்போல முசுடு.'' என்று மகளைக் கரிச்சுக் கொட்டினாள்.

பூமணிக்கு என்னவோ போலிருந்தது.

வாணிக்கு ஐந்து வயது. இந்த ஐந்து வயதிலேயே அவளுக்கு எவ்வளவு பிரச்சினை.

புரியாத விடயங்கள்தான் எவ்வளவு.

''கறுப்பி... உன்ரை நாட்டுக்குப் போடி'' என வகுப்பில் அந்த ஜெர்மானியச் சிறுவன் சொன்னபோது அவளால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

'உன்ரை நாட்டுக்குப் போடி' ஏன் சொன்னான்?

எனக்கு வேறை நாடு இருக்குதா?

அது எது?

அப்ப நான் ஏன் இங்கை வந்தனான்?

வாணிக்கு எதுவும் புரியவில்லை வாணிக்கு யார் பதில் சொல்வது?

''பூமணி.. கடைசியாய் கமலஹாசனின்ரை படம் ஒண்டு வந்திருக்காம்.. இண்டைக்கு அவரைக் கொண்டரச் சொன்னனான்'' என்றாள் மலர்.

பூமணிக்குச் சகிக்கவில்லை.

வாணியைப் பார்த்தாள். பரிதாபமாக இருந்தது. அவள் எதையோ சொல்ல விரும்புவது அவள் கண்களில் தெரிந்தது. அவளைக் கண்ஜாடையால் கூப்பிட்டாள்.

வாணி மெதுவாக நகர்ந்து வந்து அவளுக்குப் பக்கத்தில் இருந்தாள்.

''என்னம்மா?''

வாணி மெதுவாக அந்தப் பையன் கூறியதைக் கூறினாள்.

இதையெல்லாம் மலர் பொருட்டாக எடுக்கவேயில்லை.

''இஞ்சர் பூமணி கமலஹாசனின்ரை படம் உமக்கு விருப்பமே''

பூமணியின் கோபம் எல்லையைத் தாண்டி விட்டது.

''மலர் கொஞ்சம் வாயை மூடிறீரா. இந்தப் பிள்ளையின்ரை பிரச்சினையைக் கொஞ்சம் சிந்திச்சுப் பார்த்தீரே. ஒரே படத்தைப் பற்றித்தான் கதை. இந்த நாட்டிலை நாங்கள் நெடுக இருக்கேலாது. எப்பிடியும் எங்கடை நாட்டுக்குப் போகத்தான் வேண்டும். அப்பிடி ஒரு நிலை வரேக்கை வாணியிட்டை அடிதான் வாங்குவீர்''

மலர் திகைத்துப்போய் நின்றாள். வாணி வியப்போடு பூமணியைப் பார்த்தாள்.

# பாவம் கனகா

காலை நேரம்.

கடிகார முட்கள் நான் முந்தி நீ முந்தி என ஓட்டப்போட்டி நடத்திக் கொண்டிருந்தன.

நேரம் ஒன்பது மணி.

கனகா மெதுவாகத் திரும்பி கையை அகல நீட்டி காலை உதறி வலது பறமாகத் திரும்பி எழும்பினாள்.

எழும்பி மறுபக்கம் பார்த்தானள். அவள் கணவன் ரஞ்சன் போர்வையால் நன்றாகப் போர்த்தியபடி உறங்கிக் கொண்டிருந்தான்.

சாவி கொடுத்த பொம்மைபோல் இயங்குவதற்கான மன முன்னறிவத்தலுடன் கட்டிலைவிட்ட இறங்கினாள் கனகா.

கனகாவின் நண்பர்களான சுவர்களும் கதவுகளும் நிலமும் கனகா எழும்பியதும் குதூகலித்தன.

இனியென்ன கனகா எழும்பிவிட்டாள் தங்களோடு விளை யாடப் போகிறாள் என்று சந்தோசப்பட்டன.

''மெய்யேப்பா வேலைக்கெல்லே போக வேணும் .. எழும்புங் கோவன்'' என்று கணவனைத் தட்டி எழுப்பினாள்.

''இண்டைக்குக் 'கிறங்' என்று ரெலிபோன் பண்ணும் சரியான பஞ்சியாய்க் கிடக்குது''

ரஞ்சன் பஞ்சிப்பட்டான். 'கிறங்' என்றால் ஜெர்மன் பாசையில் வருத்தம் என்பதாகும்.

''நாளைக்கு லீவுதானேப்பா.. வீணாய் ஏன் 60 மாரக்கை இழப்பான் என்றாள் கனகா.

கனகாவை விழுங்கி விடுவதுபோல் பார்த்தபடி காலை உதைஞ்சு கொண்டு எழும்பினான் ரஞ்சன்.

''போய் முகத்தைக் கழுவுங்கோ ரீ போட்டுக்கொண்டு வாறன்'' என்று கூறியவாறு பம்பரமாகச் சுழன்றாள்.

நேரம் பத்துமணி. ரஞ்சனுக்கு பத்து முப்பதுக்கு வேலை.

அவசர அவசரமாக புறப்பட்டுச் சென்றான். வாசலுக்கு வந்து சிரித்த முகத்தோடு அவரை அனுப்பி வைத்தாள்.

கனகாவின் முதற்கட்ட வேலை முடிந்தது. பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

கணவனை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்த கனகா வீட்டை ஒரு தடவை நோட்டம் விட்டாள்.

எல்லாம் தாறுமாறாக இருந்தன.

மகளும் பள்ளிக்கூடப் பிள்ளைகளோடு விடுமுறையைக் கழிக்கப் போயிருந்தாள்.

ரஞ்சன் இனி வேலை முடிந்து வீடுவர இரவு இரண்டு மணியாகும்.

ஆங்காங்கு சிதறி இருந்த குப்பைகளை எடுத்து ஒரு பையினுள் போட்டாள்.

கூவரை எடுத்து தூசுகளை உள்ளிழுத்தாள்.

வயிறு நோவதுபோல் இருந்தது.

பேசாமல் கதிரையில் இருந்து விட்டாள்.

மீண்டும் எழும்பி வேலையைத் தொடங்கினாள்.

பாட்டோடு வேலை செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து றேடியோவைப் போட்டாள். பாட்டுக் கேட்டுக் கொண்டே வேகமாக வேலை செய்தாள்.

இப்போ திரும்பவும் வீட்டை ஒரு நோட்டம் விட்டாள். வீடு ஒழுங்காக இருந்தது.

அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இப்போ அவளின் இரண்டாம் கட்டமும் முடிந்தது.

மீண்டும் பெருமூச்சு விட்டாள்.

குசினிக்குள் போனாள்.

பாத்திரங்கள் அவளைப் பார்த்து அழுது கொண்டிருந்தன. மளமளவென்று பாத்திரங்களைக் கழுவி விட்டு சமையலை ஆரம்பித்தாள்.

கணவனுக்குப் பிடித்தமானதைச் சமைக்க வேண்டும்.

அப்படிச் சமைக்காவிட்டால் சீறல் சினப்புகள் அதிகமாக இருக்கும்.

'கோழிக்கறி அவருக்குப் பிடிக்கும்.' கனகா தனக்குள் தீர்மானித்துக்கொண்டு சமைக்க ஆரம்பித்தாள். கீரையை விறுவிறுவென்று அரிந்து கீரைக் கறியும் வைத்தாள். கீரைக்கு முட்டை போட்டு வைப்பது கனகாவுக்குப் பிடிக்காது. ஆனால் ரஞ்சனுக்குப் பிடிக்கும். இங்கே ரஞ்சனின் விருப்பத்துக்கே முதலிடம்.

கனகாவின் விருப்பம் என்றைக்கும் எதிலும் முதலிடம் பெறுவதில்லை.

ஒருவாறாகச் சமையல் முடிந்தது. களைத்திருந்தாள் கனகா.

சிறிது உணவு எடுத்துச் சாப்பிட்டாள்.

சாப்பிட்டுவிட்டு கதிரையில் சிறிது கண்ணயர்ந்தாள்.

கடிகாரத்தின் முட்கள் இன்னும் ஓட்டப்போட்டி நடத்திக் கொண்டிருந்தன.

நேரம் நான்கு மணி என்பதை நான்கு தரம் மணி அடித்துக் காட்டின.

திடுக்கிட்டுக் கண்விழித்தாள் கனகா.

சிறிது உடம்பை வளைத்துச் சோம்பலை முறித்துக்கொண்ட கனகா குளியலறைக்குப் போனாள்.

குளியலறையில் உடுப்புகள் ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கணவனின் உடுப்பு பிள்ளையின் உடுப்பு தனது உடுப்பு என அவற்றைத் தரம் பிரித்தாள்.

உடுப்புக் கழுவும் இயந்திரத்தில் போடக் கூடியவை போடக் கூடாதவை என மீண்டும் தரம் பிரித்தாள்.

இயந்திரத்தில் போடக் கூடியவைகளைப் போட்டுவிட்டு மிகுதி உடுப்புக்களைக் கையால் துவைக்க ஆரம்பித்தாள்.

பாவம் கனகாவுக்கு இளைக்க ஆரம்பித்தது.

இளைப்பதால் இளைப்பாற முடியுமா!

துவைத்தாள் முடியும் வரை.

துவைத்து முடிய ஆறுமணியாகி விட்டது.

நாலாம் கட்டமும் முடிந்தது.

இப்போதும் அவள் பெருமூச்சை விட்டாள்.

அடுத்த கட்டத்துகான தயாரிப்பைத் தொடங்க வேண்டும்.

குளியலறைக்குச் சென்று குளித்தாள்.

குளித்துவிட்டுவந்து தலையை அழகாக ஒப்பனை செய்தாள்.

வாசனைத் திரவியங்களைத் தெளித்தாள். உடம்பு கமகம வென்று வாசம் கொடுத்தது.

இந்த உடம்பை கணவனுக்கு அர்ப்பணிக்கவேண்டும். இது அவளது ஐந்தாவது கட்டம்.

கணவனை மகிழ்விக்க வேண்டும்.

கணவனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்.

ஊரே தூங்கிவிட்டது.

கனகா மட்டும் கணவனுக்காகக் காத்திருக்கிறாள்.

பாவம் கனகா!

## என்னை மறந்ததேன்!

இலங்கை

10-12-87

அன்புள்ள சதீஸ்

நீர் எங்கு இருக்கிறீர் என்று தெரியாமலே இக் கடிதத்தை எழுதுகின்றேன். இதை எழுத முன்பு பல தடவை சிந்தித்தேன். முடிவில் எழுத வேண்டும் என்ற விடையே எனக்குக் கிடைத்தது. இந்தக் கடிதத்தை மேற்கு ஜெர்மனியில் இருக்கும் என் பால்யத் தோழி ஒருத்திக்கே அனுப்புகின்றேன். இது வரையில் ரகசியமாய் இருந்த உங்களுக்கும் எனக்கும் இடையில் இருந்த உறவைப்பற்றி அளுக்கு மட்டும் எழுதியுள்ளேன். ஏனென்றால் இந்தக் கடிதத்தை எப்படியாவது உங்களிடம் அவள் சேர்ப்பித்து விடுவாள் என்றுதான்.

அத்தோடு உங்களிடம் மன்னிப்பும் கேட்கின்றேன் ஏனென்றால் விதிவசமாக உங்களைக் கண்டுபிடிக்க அவளால் முடியா விட்டால் இந்தக் கடிதத்தை ஏதாவது ஒரு பத்திரிகையில் பிரசுரிக்க ஆவன செய்யும்படி கேட்டிருந்தேன். இந்தச் செய்கை உங்களைக் கோபப்படுத்தும். ஆனால் என்ன செய்வது?. நீங்கள்தான் எனக்கு விலாசமில்லாதவராக ஆகி விட்டீர்களே! என்றாலும் நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை.

எங்களுடைய தொடர்பு மிக இனிமையானதும் கண்ணிய மானதும் என்று உங்களுக்குத் தெரியும்தானே! இந்தக் கடிதத்தை நீங்கள் வாசிக்கும் போது நான் உயிருடனிருப்பேனா என்பதும் எனக்குத் தெரியாது.

இலங்கையிலிருந்து இக்கடிதத்தை எழுதுவதாகக் குறிப்பிட்டி ருந்தாலும் உண்மையில் நான் அடர்ந்த கானகத்தின் மத்தியிலிருந்து தான் எழுதுகின்றேன். நான் எப்படிக் காட்டுக்கு வந்தேனென்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். அது பெரிய கதை. இதோ நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் போது என்னிலிருந்த சிறிது தள்ளி பாம்பு ஒன்று நெளிந்து செல்கிறது. சாரைப் பாம்பென்று நினைக்கவேண்டாம். கொடிய நாகம்தான் செல்கிறது. உங்களுக்குப் பயமாயிருக்கும். எனக்குப் பழகிப்போன ஒன்று. இப்படியான கொடிய விஷ ஜந்துக்கள் மத்தியிலிருந்தும் கூட உங்களது நினைவு என்னைச் சில நேரம்

நிரம்பத் துன்பப்படுத்தும். என்ன செய்வது மனதுக்குள் அழுது என்னைத் திருப்திப்படுத்திக் கொள்வேன்.

ஆனந்தம். இதுதான் நான் உங்களுக்கு வைத்த செல்லப்பெயர். அந்தப் பெயரைச் சொல்லவே எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. கொழும்பில் நாங்கள் இருவரும் வேலை செய்த காரியாலயத்தில் எவ்வளவு சந்தோசம். நீங்கள் எவ்வளவு மதிப்பு என்மேல் வைத்திருந்தீர்கள். ராணி. ஆமாம் இதுதான் என் பெயர். நீங்கள் எனக்கு வைத்த செல்லப் பெயர். நான் அடிக்கடி லீவு எடுக்கும் போதெல்லாம் என்னை என்ன மாதிரிக் கண்டிப்பீர்கள். ஒவ்வொரு தடவையும் நான் லீவு எடுக்கும்போது உங்களுக்கு நான் வருத்தம் என்று தான் சொல்வேன். ஒரு தடவை மாற்றத்துக்காக மாமா வெளியிலிருந்து வந்திருக்கிறார் என்று சொன்னேன். நீங்களும் அதை நம்பி அடுத்தநாள் நான் வந்த போது வெளிநாட்டுச் சொக்கிலேற் கேட்டீர்கள். நானும் மறுப்புச் சொல்லாமல் அடுத்த நாள் கடையில் வாங்கி வந்து தந்தேன். இதைக் கண்டு பிடித்த நீங்கள் அன்று என்னைப் படுத்தியபாடு. அதை நினைக்க இன்றும் எவ்வளவு இனிப்பாக இருக்கிறது.

இவ்வளவு கலகலப்பாக நாங்கள் பழகியும் என்னைப் பற்றி எதையுமே வெளிப்படையாக உங்களுக்குக் கூறியதில்லை. நீங்களும் கேட்கவில்லை. ஆனால் எனக்குக் காதல் உள்ள விடயம் நீங்கள் அறிந்திருந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ் இளைஞர்கள் மனிதாபி மானமற்ற முறையில் கொல்லப்பட்டபோது நான் ஒரு மூலையில் இருந்து வேதனையோடு அழுது கொண்டிருந் தேன். உங்களுக்கும் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்னருகில் வந்து 'ராணி' என்றீர்கள். நான் உங்களை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. உங்களின் குரலைக் கேட்டதும் எனக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. நீங்கள் மீண்டும் என்னைக் கூப்பிட்டீர்கள். நான் உங்களைப் பார்த்தேன். உங்களுக்கு என்னுடைய அழுகையின் அர்த்தம் புரியவே யில்லை. நீங்கள் என்னென்னவோ எல்லாம் நினைத்தீர்கள். ஓ! ஆனந்தம் அப்போதான் அந்த ரகசியத்தை உங்களுக்குச் சொன்னேன். என்னுடைய காதலரின் பெயர் உங்களுக்குத் திகைப்பைத் தந்தது. அவரின் பெயரை இந்தக் கடிதத்தில் உங்கள் நலன் கருதிக் குறிப்பிடவில்லை.

அவருடைய இழப்பு எனக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கே பேரிழப்பு. நீங்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்தீர்கள். பிறகு உங்களை நிதானப்படுத்திக் கொண்டு எனக்கு ஆறுதல் சொன்னீர்கள். உங்களுடைய ஆறுதல் மொழிகள் எனக்கு முழுமையான ஆறுதலைத் தராவிட்டாலும் சிறிது மன நிம்மதியைத் தந்தது. கவலைப்பட்டு என்னதான் செய்வது. என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

நாட்டில் ஏற்பட்ட கலவரம் நான் நீங்கள் எல்லோரும் பிறந்த இடம் செல்லும்படி நேரிட்டது. எனது ஊரும் உங்கள் ஊரும் அருகருகான ஊர்கள். தெரிந்தவள் என்ற பெயரில் என்னோடு அடிக்கடி வந்து கதைப்பீர்கள். இப்படி நாங்கள் கதைத்ததால் தானே எங்களுக்கிடையில் அந்நியோன்னியமான அன்பு உருவானது.

ஓ! என் ஆனந்தம் எவ்வளவு அன்போடு கதைப்பீர்கள். இப்போ என்னை மறந்து எப்படி உங்களால் இருக்க முடிகிறது.

எங்களுக்கிடையில் உள்ள தொடர்பு உங்கள் வீட்டாருக்குத் தெரிய வந்தபோது எவ்வளவு பிரச்சினை? எவ்வளவு துன்பம்? நான் சாதி குறைந்தவள் என்று உங்கள் வீட்டார் என்னை எவ்வளவு இளக்காரமாகத் தூக்கி எறிந்தனர். அப்போது நீங்கள் வந்து எனக்குக் கூறிய வார்த்தைகள்தான் எவ்வளவு? என்னுடைய பழைய காதல் விடயம் இராணுவத்தினருக்குத் தெரியவர எனக்குப் பிரச்சினை வர ஆரம்பித்தது. அப்போது நீங்கள் துடித்த துடிப்பை எப்படி எழுத்தில் வடிப்பேன். வெளியில் போய் விடுவோமென்று சொன்னீர்கள். நான் தான் பிடிவாதமாக மறுத்தேன். என்னுடைய மனம் நாட்டுக்குச் சேவை செய்வதைத்தவிர வேறு எதையும் சிந்திக்க மறுத்தது. ஆனால் இனிமேல் நாட்டில் இருப்பது ஆபத்தென்று உணர்ந்தேன். அவர் சார்ந்த இயக்கத்தாரோடு தொடர்பு

கொண்டேன். அவர்கள் என்னை இந்தியாவுக்கு அனுப்புவ தென்று முடிவெடுத்தார்கள். நானும் சம்மதித்தேன். இதை உங்களுக்குச் சொன்னபோது நீங்கள் தாம்தூமென்று துள்ளிக் குதித்த காட்சிகள் இப்பவும் என் கண்களில் தெரிகிறது.

நான் நினைக்கிறேன் அதற்குப் பின் நான் உங்களைச் சந்திக்கவேயில்லை.

இந்தியாவுக்குப் போனதும் என் வாழ்க்கையின் திசையே மாறிவிட்டது. பயிற்சி வகுப்புகளில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்தேன். மனதில் ஒரு வெறி. எனக்குள்ளே நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. உங்களை நினைக்கக்கூட எனக்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. அவ்வளவுக்கு நாட்டுப் பிரச்சினைகளோடு ஒன்றிவிட்டேன்..

இப்போ நாட்டுக்குக் களமாட வந்துவிட்டேன். காட்டுக்குள் தான் வாழ்க்கை. என் தங்கை மூலமாக உங்களைப்பற்றி விசாரித்தேன். நீங்கள் நாட்டில் இல்லை என்பது தெரியவந்தது. இந்தக் கடிதம் எழுதும் நேரம் கொஞ்சம் ஓய்வாக இருந்தேன். உங்கள் நினைவு வந்தது.

நீங்கள் இங்கு வரும்போது நான் உயிரோடிருப்பேன் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஒவ்வொரு நிமிடமும் உயிரை அர்ப்பணிக்க தயாராக உள்ளோம். எங்கள் வாழ்வு முழுமையாக நாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் எங்கிருந்தாலும் நாட்டை மறக்க வேண்டாம். உங்களுக்குப் பிள்ளைகள் இருந்தால் என்னைப்பற்றி அவர்களுக்குக் கூறுங்கள். எங்களது எதிர்காலத் தலைமுறை எங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். எங்கள் தியாகங்கள் அர்த்தமுள்ளவையாக்கப் படவேண்டும்.

இப்படிக்கு உங்களை
இன்னும் மறவாத
ராணி

# கட்டுரைகள்

# திருவருளின் திருநீறு

தலைப்பு புதிதாக இருந்தாலும் உள்ளே வருவது பழசுதான். நான் எழுதுகின்றேன் என்றவுடன் முகம் சுழிப்பவர்களும் அச்சம் கொள்பவர்களும் பலர். என்னோடு பயணித்துப் புளகாங்கிதம் அடைந்து மகிழ்ந்து வாழ்பவர்கள் ஏராளம்.

பட்டென்று சொல்கிறேன். உண்மையை உங்கள் காலடியில் உடைக்கிறேன். முகம் பார்ப்பதில்லை. முகத்துக்காக நெளிவது மில்லை. மொத்தத்தில் நான் சோரம் போவதில்லை.

கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது முதுமொழி. அதற்காக நாம் நினைத்த இடமெல்லாம் ஆலயம் அமைக்க முடியாது. என்ன செய்வது கிடைத்த இடத்தில் தானே ஆலயம் அமைக்க முடிகிறதென்ற முனகல் கேட்கிறது.

அப்படி என்ன அவசரம். யாராவது வலிந்து கேட்டார்களா? இல்லையே!! மக்களுக்குத்தானே ஆலயங்கள். அந்த மக்களே நிம்மதியாக நின்று வழிபட முடியாமல் தவிக்கும் இடங்களில் ஆலயம் அமைக்கும்போது எப்படி பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

ஆலயங்களின் மிகப்பெரிய விழாவான தேர்த் திருவிழாவின் போது நாதஸ்வரக் கலைஞர்கள் சினிமாப் பாட்டுக்களை வாசிக்கும்போது சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? சினிமாப் பாட்டுப் போட்டால் தான் காவடி எடுத்தவர்கள் ஆட முடியுமென்று சப்பை நியாயம் சொல்லும் போது எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

அர்த்தமில்லாமல் கிரயைகளின் எண்ணிக்கைகளை பணத்தை நோக்காகக் கொண்டு அதிகரித்து மக்களை அசௌகரியப் படுத்தும் போது வாயையும் பொத்தி கையையும் கட்டிக் கொண்டு எப்படி இருக்க முடியும்?

விக்கிரகங்களை தான் தோன்றித்தனமாக எவ்வித நியமங்களுக்கும் கட்டுப்படாமல் மந்திரம் சொல்பவர்கள் எல்லோரும் மன்னர்கள் என்ற பார்வையில் அமைக்கும் போது மௌனமாக இரு என்று கேட்பது எந்தவகையில் நியாயம் என்று சொல்ல முடியும்?

மக்கள் என்றைக்குமே ஆலயம் வைக்கும்படி கேட்பதில் லையே! நீங்கள் உங்கள் சுய நலத்திற்காகவும் சுய லாபத்திற்காகவும் ஆலயங்களை அமைக்கும்போது நியமத்தின் படி செய்யுங்கள் பணத்தை நோக்கிச் செய்யாதீர்கள் என்று சொல்வதில் என்ன வக்கிரம் இருக்கிறது.

ஆலயங்கள் தர்மம் செய்யத்தான் வேண்டும்! ஆனால் அதுவே மந்திரமாகி விடக் கூடாதல்லவா?

புலம் பெயர்ந்த நாடுகளில் ஆலயங்களுக்கு எவ்வளவு பணிகள் உண்டு. இந்தப் பணிகளைச் சுட்டிக்காட்டி நீங்கள் இப்போ செய்வது தவறு என்று அடித்துச் சொன்னால் அடிவாங்கு முன்னமே அழத் தொடங்குவது எந்த வகையில் நியாயம்.

திருநீறு பூசினால் திருவருளின் குழந்தையாக இருங்கள்.

பெருவாழ்வு கிடைக்கப் பெருங்காரியங்கள் செய்யுங்கள். உரிய அறிவுரைகளை உற்றுக் கேளுங்கள்.

உங்களை வில்லுங்கள் கடவுளை விற்காதீர்.

## சமயமும் சம்பவங்களும் 1

சமயங்களின் பின்னணியில் பல நூறு கதைகளும் பல நூறு சம்பவங்களும் அணிவகுத்து நிற்கின்றன. ஒரு சிலர் இவற்றை எவ்விதமான கேள்விகளுமின்றி ஏற்றுக்கொள்வதும் ஒரு சிலர் இவை எல்லாம் முற்று முழுதாக மனிதனை முட்டாளாக்குகின்ற கருத்துகள் என்று ஒதுக்கிவிடுவதும் சர்வசாதாரணமாக நடக்கின்றன. அதே நேரம் இன்னொரு சாரார் சமயம் சம்பந்தப்பட்ட விடயங்களை விமர்சிப்பது சரியாக இருக்காது என்றும் அவற்றை அப்படியே விட்டுவிட வேண்டுமென்று கூறுவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

எதையும் நிராகரித்தல் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நழுவிப்போதல் என்கின்ற இத்தகைய வாதங்களுக்கு அப்பால் சிந்தித்தல் என்கின்ற இன்னொரு செயற்பாடு உள்ளது

என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். இந்தப் பக்கத்தில் சமயத்தின் சம்பவங்களைப் பற்றி சிந்திப்பதே என் நோக்கமாக உள்ளது. இது முற்று முழுதாக என்னுடைய சிந்தனையில் எழுந்த கருத்துக்களே. என்னுடைய இந்தச் சிந்தனைகள் எங்காவது ஒரு இடத்தில் உங்களையும் சிந்திக்க வைத்தால் என்னைப் பாராட்டுங்கள் அல்லாமல் என் சிந்தனைகள் ரகசியமாக உங்களை எங்காவது ரணப்படுத்தினால் தயவுசெய்து பகிரங்கமாக என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு நான் தொடர்ந்து சிந்திக்க ஆரம்பிப்பேன்.

வேதம் சம்பந்தமாக ஒரு சிந்தனை. வேதம் என்பது இறைவனுடைய வாக்கு என்று சொல்லப்படுகிறது. இது உண்மையில்லை. வெறும் கற்பனையே. இது இறைவன் வாக்காக இருந்திருந்தால் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும் ஆனால் வேதம் பற்றிய கண்டனங்கள் தானே மக்கள் மத்தியில் உள்ளது. ஆலயங்களில் சமஸ்கிருதத்தில் பூசைகள் செய்கிறார்கள். கேட்டால் வேதத்தில்தான் இவையெல்லாம் நடைபெறுகின்றது வேதம் தமிழில் இல்லை அது செய்யா மொழி என்று காரணம் கற்பிக்கிறார்கள்.

ஒரு சாராருடைய சுயநலத்திற்காகவே வேதம் என்பது இறைவனுடைய வாக்கு அதை நூல் வடிவில் எழுதக்கூடாது

எனறெல்லாம் கூறி அதனை ஓதுதல் மட்டுமே செய்து வந்தனர்.

*ஆற்றல் அழியுமென்றந் தணர்கள் நான்மறையைப்*
*போற்றியுரைத் தேட்டின புறத்தொழுதார்*

என்று திருவள்ளுவ மாலையில் குறிப்பிட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் அது மொழி பெயர்க்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துவிட்டது. இது பொது நூலாக ஏற்றுக் கொள்ளப்படவேயில்லை. இராமலிங்க வள்ளலார் வேதமும் அதன் பின்னணியில் வெளிவந்த வழி நூல்களும் பிற சமுதாயத்தினருக்கு தீமையே பயக்கும் என்றும் கூறிச் சென்றுள்ளார்.

*வேதா கமங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்*
*வேதா கமத்தின் விளைவறியீர் - சூதாகச்*
*சொன்னவலால் உண்மை வெளித்தோன்ற உரைத்தலிலை*
*என்ன பயனோ இவை*

என்று கூறுகிறார்.

*செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த*
*பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா*
*அதற்குரியவர் அந்தணரே ஆராயின் ஏனை*
*இதற்குரியர் அல்லாதார் இல்*

என்று திருவள்ளுவ மாலையில் கூறுவதையும் நாம் மனங் கொள்ள வேண்டும். ஆக மொத்தத்தில் வேதத்தை இறைவன் கூறிய ஒன்றாக திட்டமிட்டு மக்கள் மத்தியில் பரப்பி தமிழ் மொழி மூலம் பாடல்கள் ஆலயங்களில் தடுத்தவர்கள் யாரென்பது தெளிவாகப் புரிகிறது. ஆதலால் இனிமேல் ஆலயங்களில் வேதம் ஓதுவதை ஒழித்துவிட்டு திருவாசகம் தேவாரம் போன்ற தமிழப் பாடல்களையே ஓதவேண்டும். அப்போதான் நாட்டில் இறையன்பு கொண்டவர் பலர் தோன்றுவர்.

## உன்னதங்கள்!

கண்ணை மூடிக்கொண்டு நீ தியானத்தில் இருப்பது எனக்குத் தெரிகிறது.

மெதுவாகக் கண்ணைத் திற.

இந்த உலகத்துக்கு நீ வரவேண்டும்.

உனக்கு முன் இந்த உலகத்தில் விரிந்து கிடக்கும் உன்னதங்களை உன்னித்துப்பார்.

உனக்குப் புரியாத இந்த உன்னதங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன.

பூக்கள் மலர்ந்திருக்கின்றன. சிகப்பு வெள்ளை மஞ்சள் என்று எத்தனை நிறங்கள்.

யார் இவற்றிற்கெல்லாம் வர்ணம் தீட்டியது. எவ்வளவு நேர்த்தியாக ஒழுங்காக வர்ணம் தீட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஓவியனைப்பற்றி நீ என்றாவது சிந்தித்திருக்கிறாயா?

இல்லையே!!

உன்னால் முடியாது. உனக்குள்ளே ஆணவம் நிரம்பி இருக்கிறது.

எல்லாம் உன்னால் முடியும் என்று நினைக்கிறாய்.

உன் கையைக் கூட உன்னால் அசைக்க முடியாது என்கின்ற உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாய்.

இந்த ஆணவ நிலையில் உலகின் உன்னதங்களை உன்னால் பார்க்கவோ தரிசிக்கவோ முடியவில்லை.

உன் மனதில் அழுக்குப் படிந்துவிட்டது.

பார்ப்பவை கேட்பவை எல்லாம் உனக்குப் பிழையாகவே தோற்றுகின்றன. இதனால் நீ தவறாகவே நடக்கிறாய்.

உலகின் பௌதிகத் தோற்றங்களை உண்மை என்று நம்ப ஆரம்பித்து விடுகின்றாய்.

நானே பெரியவன் நானே உலகம் என்று உரத்துச் சத்தமிடுகிறாய்.

நீ பெரியவன்தான் உன்னை நீ அடையாளம் கண்டு கொண்ட பின்பே!

உனக்கு எல்லாம் தெரியும் என்பதும் உண்மையே! எப்போ தென்றால் உன்னை நீ உண்மையாகத் தரிசிக்கும்போதே!

திருமந்திரம் தந்த திருமூலரை உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

அதிலிருந்து ஒரு பாடலைக் கூறுகிறேன் கேள்.

*தாமறிவார் அண்ணல் தாள்பணிவார் அவர்*
*தாமறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்*
*தாமறிவார் சிவ தத்துவர் ஆவார்கள்.*
*தாமறிவார்க்குத் தமர்பரன் ஆமே!*

இதுதான் உண்மை. தம்மை அறிந்தவர்கள் ஞானிகள். இவர்கள் பரம் பொருளை நன்கு அறிந்து கொள்வார்கள். தம்மை உணர்ந்தவர்கள் மட்டுமே அறவழியில் நிற்பார்கள். தம்மை அறிந்தவர்களால் மட்டுமே சிவ நாமத்தை உணர்வோடு உச்சரிக்க முடியும்.

உன்னை அறிதல் மட்டுமே உண்மையானது.

உனது தலையாய கடமையும் அதுவே! உன்னை அறியும் போது மற்றையவை எல்லாம் உன்னைவிட்டு மறைந்துவிடும்.

நீ நூறு வயதுவரை வாழ்ந்தாலும் உன்னைப் புரிந்து கொள்ளாத வரை நீ வாழாதவனாகவே கருதப்படுவாய்.

# நாதனை மறைத்திடும் நவக்கிரகங்கள்

நவக்கிரகங்கள் என்பவை அண்டத்தை வலம் வரும் கோள்கள். இவை சூரிய குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்தக் கோள்களின் இயல்பான ஈர்ப்பு சக்தியினால் பூமியிலுள்ள ஜீவராசிகளும் சடப்பொருள்களும் பாதிப்புகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளாகின்றன.

பூமியின் சில பகுதிகளில் நில நடுக்கம் உண்டாகிறது. காற்று சூறாவளியாகிப் பல அனர்த்தங்களை உண்டு பண்ணுகின்றது. ஆறுகளும் நதிகளும் பொங்கிப் பிரவாகித்து நாசம் விளைவிக்கின்றன. கடல் கொந்தளித்து பல நகரங்களையே விழுங்கி விடுகின்றது. மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்பு உண்டாகிக் காட்டுத் தீ நாடு முழுவதும் பரவுகின்றது.

சும்மா இருந்த மனிதன் மன நோய் பிடித்து வீதிகளில் ஓடுகின்றான்.

சும்மா இருந்தவன் வாந்தி எடுத்து இறந்து விடுகின்றான்.

திடீரென்று மனிதனுடைய உடம்பு எதிர்பாராத அளவுக்கு வெப்பமடைந்து மடிகிறான்.

இவற்றுக்கெல்லாம் விஞ்ஞானம் எல்லாம் நடந்து முடிந்த பின்புதான் விளக்கமும் மருந்தும் தருகின்றது. சமயம் பல காரணங்களையும் நிவாரணங்களையும் கூறுகின்றது.

சனிமாற்றம் வியாழ மாற்றம் செவ்வாய் தோஷம் போன்ற வற்றைக் கூறி மனிதனைப் பயம் கொள்ள வைக்கிறது சமயம்.

நவக்கிரங்களுக்குப் பூசை செய்தால் எல்லாவற்றிலிருந்தும் தப்பிவிடலாம் என்று சமயம் அறிவுரை கூறுகின்றது.

இவ்வாறான சமய சிந்தனைகளுக்கு அப்பால் மனிதன் சிந்திப்ப தில்லை. அவனைச் சிந்திக்க யாரும் அனுமதிப்பதில்லை.

இவையெல்லாம் சமயத்தை தங்கள் கைப் பொம்மைகளாக்கிக் கொண்ட பூர்வ மீமாம்சகர்களாகிய பிராமணர்களின் கைங்கரி யம் என்பதை பொது மக்கள் யாரும் புரிந்து கொள்வதில்லை.

கிரகங்கள் பூமியை வலம் வருகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுகின்றது. இந்த இயக்கம் தொடர்ந்து ஓய்வில்லாமல்

நடந்து கொண்டிருக்கின்றது. இதன்போது காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கிரகமும் பூமிக்கு அண்மையாக வருவதும் போவதுமாக உள்ளன. ஒவ்வொரு கிரகங்களும் தத்தமக்கென்று வெவ்வேறளவில் ஈர்ப்பு சக்திகளைக் கொண்டிருக்கின்றன. இந்த ஈர்ப்பு சக்திகளினால் பூமியிலுள்ள உயிர்களும் சடப்பொருள்களும் ஈர்க்கப்படுகின்றன. உலகம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையாகும்.

நமது உடலும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே. காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கிரகமும் பூமிக்கு அண்மையில் வருவதாக வானிலை சம்பந்தப்பட்ட அறிவு சொல்கிறது. இவ்வாறு வரும்பொழுது இக்கிரகங்களின் ஈர்ப்பு சக்தி பூமியைப் பாதிக்கின்றது.

ஒரு ஹெலிகொப்டர் பூமியில் இறங்கும்போது எப்படி பூமியிலுள்ள பொருட்கள் அங்கு மிங்கும் பறக்கின்றனவோ அதேபோல் கிரகம் ஒன்று வரும்போதும் நாம் எதிர்பாராத பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதுவே மறுக்கமுடியாத உண்மையாகும்.

இதனைத் தவிர்ப்பதற்கு (தவிர்க்க முடியாது) அந்தக் கிரகங்களைத் திட்டமிட்டுக் கடவுள்களாக்கி அவற்றிற்கு எள்ளெரிக்க வைத்து பணம் சம்பாதிக்கத் தொடங்கியது ஒரு கூட்டம்.

எமது உடம்பு நிலத்துக்கு சமமாகும். நிலத்தில் பயிர்கள் வளர்கின்றன அதே போல் எமது உடம்பில் மயிர்கள் வளர்கின்றன.

எமது உடம்பிலுள்ள மயிர்த்துளைத் துவாரங்களினூடாக வியர்வையாக நீர் வெளியேறுகின்றது. கண்ணிலிருந்து கண்ணீர் வழிகின்றது.

உடல் வெப்ப நிலையில் உள்ளது. காற்று எங்களது சுவாசம். ஆகாயம் கண்கள்.

இப்படி பஞ்ச பூதங்களின் சேர்க்கையாக உள்ள உடம்பு கிரங்களின் ஈர்ப்பு சக்தியினால் பாதிக்கப்படுவதும் ஆக்கிர மிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததே!

ஈர்ப்பு சக்தியினால் இரத்த அழுத்தங்களில் மாற்றங்கள் உருவாகும் உடம்பு அதிக வெப்ப நிலையை அடையும். எதிர்பாராதவிதமாக அந்தந்தக் கிரகங்களின் ஈர்ப்பு சக்திகளின் வலிமைக்கேற்ப உடலின் உள்ளே உள்ள உறுப்புகளின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும். அதாவது மனிதர்கள் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பர்.

மனிதர்களின் இந்த நிலைமைகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திய பிராமணர்கள் சனி முதற் கொண்ட ஒன்பது கிரகங்களையும் கடவுளராக்கி அவர்களை வழிபடச்

செய்வதற்கான சட்ட திட்டங்களையும் தம் மனம்போன போக்கில் உருவாக்கினர்.

இவ்வாறு மனித சிந்தனைகளை மழுங்கடித்த இவர்கள் சனிக்கிரகத்தின் ஈர்ப்பு சக்தி பூமியில் அதிகமாக இருப்பதால் அதனை பிரதான பாதிப்புத் தரும் தெய்வமாக்கி அதற்கு சனீஸ்வரன் என்ற பெயரிட்டு வைத்தனர். இதனை மக்கள் நம்பவேண்டும் என்பதற்காக சனீஸ்வரனால் எல்லாம் வல்ல சிவபெருமானே பாதிக்கப்பட்டார் என்று புராணவழிக் கதை ஒன்றையும் பரப்பிவிட்டனர். மக்களைப் பயங்காட்டி எள்ளெரிக்க வைப்பதில் அவர்கள் வெற்றி கொண்டார்கள் என்றே கூறவேண்டும்.

மக்களும் பயத்தின் மிகுதியால் பெருவாரியாகச் சென்று நவக்கிரகங்களை வழிபடத் தொடங்கினார்கள். இங்கே ஒரு விடயத்தை பக்தர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எள்ளெரிப்பதனால் சனிக்கிரகமோ அல்லது வேறு எந்தக் கிரகமோ பூமிக்கு அண்மையில் வருவதை தடுத்துவிட முடியாது என்பதாகும். ஆயின் எள்ளெரிப்பதால் எமது துன்பத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பதே.

ஆலயங்களில் சிவனை வழிபடும் நேரத்தை விட பக்தர்களை விட நவக்கிரகங்களை வழிபடும் நேரமும் பக்தர்களும் அதிகரிக்கத் தொடங்கினர். இவர்களின் துன்பங்கள் தீர்ந்ததோ

என்னவோ ஆலயங்களின் பண வருவாய் அதிகரிக்கத் தொடங்கியது.

இறைவனை விட நவக்கிரங்களுக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினார்கள்.

இவற்றுக்கெதிராகக் குரல் கொடுத்தவர்கள் ஆகமத்துக்கு எதிரானவர்கள் என்றும் வேதத்தின் எதிரிகள் என்றும் பிராமணர்களால் குற்றம் சாட்டப்பட்டனர்.

சாதாரண பக்தர்கள் ஆகமம் என்பதைப் புரியாதவர்களாகவே உள்ளனர்.

இவர்கள் ஐயர் சொல்வதையே ஆகமம் என்று எண்ணி வாழுமளவுக்கு அறிவில் சூனியர்களாகவே இருந்தனர்.

ஆகமம் என்பது இறைவனை வழிபடுவதற்கான வழி முறைகளைத் தன்னகத்தே கொண்டதாகும். ஆகமத்தில் இடையிலே உருவாக்கப்பட்ட தெய்வங்களைப் பற்றி எதுவுமே கூறப்பட்டில்லை. *ஆ* என்பது பாசத்தையும் *க* என்பது பசுவையும் *ம* என்பது பதியையும் குறிப்பதாகும். இது சைவ சித்தாந்தத்தை அடியொற்றியதே ஆகும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர்

*வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழந்து அகன்ற நுண்ணியனே* என்று கூறுகிறார்.

இறைவன் ஒருவரால் மட்டுமே எமது இன்னல்களைத் தீர்க்க முடியுமென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இறைவனை வழிபட வழிபட எமது ஆன்ம பலம் அதிகரிக்கும்.

எமக்கு வருகின்ற பிரச்சினைகளை இல்லா தொழிக்க முடியாது. ஆன்ம பலத்தை அதிகரிப்பதன் மூலம் பிரச்சினைகளை தாங்கி கொள்ளும் வல்லமைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஆன்ம பலத்தை அதிகரிக்க நாம் இறைவனையே வணங்கவேண்டும். அவனைக் குறித்தே நாம் தியானம் செய்ய வேண்டும். பதிலாக நவக்கிரகங்களை வழிபடுவதால் இன்னும் நாம் பலவீனமாக்கப்படுவோம். நாங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பலவீனமாக்கப்படுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எம்மை வைத்து மற்றவர்கள் பணம் பண்ணத் தொடங்கி விடுவார்கள்.

சனியை நாம் இறைவனின் அம்சமாகக் கொண்டே வழி படுகின்றோம் என்ற வாதம் வைக்கப்பட்டாலும் இறைவனே இருக்கும்போது எதற்கு அவருடைய அம்சமாக இன்னொன்றை வழிபடவேண்டும்.

இந்த ஆன்ம பலத்தை அதிகரிப்பதற்காக திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஒன்றைப் பார்ப்போம்.

இரண்டாந் திருமுறையில்

*வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி*
*சனி பாம்பிரண்டும் உடனே*
*ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல*
*அடியாரவரக்கு மிகவே*

என்று பாடுகின்றார்

நாளும் பொழுதும் ஈசனையே நினைந்து அவனைச் சரணடைந்து வாழ்வோமாயின் எங்களுக்குள் பிரவாகிக்கும் ஈசனுடைய இறை சக்தி கிரகங்களின் ஈர்ப்பு சக்தியைவிடப் பலம் வாய்ந்த எதிர்ப்பு சக்தியாக உருவாகி எமதின்னல்களை நாமே தாங்கக் கூடியளவுக்கு மனோபலத்தைக் கொடுக்கும் என்பதுதான் உண்மையாகும்.

எந்தவொரு அருளாளரும் கிரகங்களை வழிபடும்படியோ அல்லது எள்ளெரிக்கும்படியோ கூறவில்லை.

நாளுங் கோளும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவையே என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் கூறுகின்றார்.

நாளென் செயும் வினைதான் என்செயும் என்னைநாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

இங்கு நாளென் செயும் என்றுதான் கேட்கிறார். இவற்றை யெல்லாம் ஆண்டவன் சந்நிதியில் இசையோடு ஒப்புவிக் கின்ற நாம் இவற்றின் கருத்துக்கள் வழி நில்லாது எவ்வளவு முட்டள்களாக சிந்தனையற்ற சுயலம் நிறைந்த ஒரு கூட்டத்தின் வாய் வார்த்தைகளை நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கின்றோமே. புலம் பெயர்ந்த நாடுகளில் இட நெருக்கடியான சில ஆலயங்கள் பண வருவாயை முதன்மையாகக் கொண்டு நவக்கிரங்களை அமைத்து பக்தர்களை படுத்துகின்ற துயரத்துக்கு அளவேயில்லை.

இறுதியாக சிறு தெய்வ வழிபாடுகளிலிருந்து விலகி எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை வணங்கி உய்வுறுவோமாக.

## சமயமும் சம்பவங்களும் 2

நிஜமான சில சம்பவங்களை இப்படியும் நாம் சிந்திக்கலாமே என்ற எண்ணத்தில் வெளிப்பட்ட சில உண்மைகள் தான் இவை. இம்முறை ஜலசமாதி பற்றிய ஒரு சிந்தனை. இந்தச் சிந்தனைகள் நாஸ்திக வாதச் சிந்தனைகள் அல்ல. சமயத்தின் பெயரால் சமூகத்தில் நடைபெறும் தில்லுமுல்லுகளும் அறியாமைகளும் சம்பவங்களாகி பக்தர்களை பதர்களாக்கும் கைங்கரியங்களை வெளிக்கொணரும் சுகமான சிந்தனைகளே!.

சமயம் வேறு ஆத்மீகம் வேறு. ஆத்மீகத்தில் முழுக்க முழுக்க இறைவனைப் பற்றிய சிந்தனைகளே காணப்படுகின்றன. சமயம் என்பது பக்தர்களைச் சிந்திக்கவிடாது முட்டாள்களாக வைத்து வியாபாரம் பண்ணுகின்ற ஒரு கலையாகும். சமயம்

என்பது சாதாரண மனிதன் இறைவனை அடைவதற்கான பாதை என்று சொல்வார்கள். அப்படியெல்லாம் இல்லை. உண்மையில் சமயம் என்பது இறைவனை அடையவிடாமல் தடுக்கின்ற ஒன்று ஆகும். சமயத்தின் ஊடாகத்தான் ஆன்மீகத்தை அடைய முடியும் என்பார்கள். அப்படியும் இல்லை. சமயத்துக்கும் ஆன்மீகத்திற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. ஆன்மீகம் என்பது சிந்தனையினூடாகவும் பக்தி மார்க்கத்தினூடாகவும் இறைவனை நோக்கி மனிதனை மெல்ல மெல்ல நகர்த்துகின்ற தூய மார்க்கமாகும். மனிதனுடைய பலவீனங்களை அறிந்து காலத்துக்குக் காலம் சில மனிதர்கள் தங்களை கடவுளின் தூதுவர்களாக அறிவித்து பணம் பண்ணுகின்ற காரியங்கள் பல நடந்து கொண்டே யிருக்கின்றன. நூறுவீதமான சுவாமிமார் பெண்களையே தங்களின் சீடர்களாகக் கொண்டிருக்கிறார்கள். பெண்களை ஏமாற்றுவது அவர்களுக்கு இலகுவானது என்பதால்தான். எத்தனையோ சுவாமிமார்கள் பெண் தொடர்புகளால் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளார்கள் என்பது எல்லாருக்கும் நன்கு புரியும்.

இப்படியான ஒரு சுவாமியாரின் ஜலசமாதி பற்றித்தான் இங்கு கூறப்போகிறேன். இந்தச் சுவாமியாரின் பெயர் ஹரிதாஸ். இவர் மிக நன்றாகப் பாடுவார். இவருக்கு லண்டனிலும்

இலங்கையிலும் ஏராளமான பக்தர்கள் இருக்கிறார்கள். இந்த சுவாமியாரின் கால்களைக் கழுவி அதனை தீர்த்தமெனக்கருதி வாயில் விட்டவர்களும் பலபேர்.

இவருடைய ஆளுயர படத்தை வீட்டில் வைத்துப் பூசை செய்த பக்தர்களும் உண்டு. அதே பக்தர்கள் அவருடைய படத்தை குப்பையில் எறிந்து நெருப்பு வைத்துக் கொழுத்தி சந்தோசப்பட்ட நிகழ்வுகளும் உண்டு.

இப்படியான இவருடைய முடிவு நிரம்ப வேதனையான ஒன்று ஆகும்.

ஒரு நாள் காலை சுவாமியாரும் அவருடைய சீடர்களும் கடலில் நீராடச் சென்றிருந்தார்கள். குருவுடன் சேர்ந்து தாங்களும் நீராடுவதால் மகிழ்ச்சியுடன் இருந்தனர் அந்தப் பக்தர்கள். குளித்துக் கொண்டிருந்த சுவாமிகள் திடீரென்று தன் இரு கைகளையும் உயர்த்தி பக்தர்களை நோக்கி வேகமாக அசைக்கத் தொடங்கினார். பக்தர்களும் உடனே கோவிந்தா கோவிந்தா என்று கோசமிட்ட வண்ணம் அவரை நோக்கிக் கரங்குவித்தனர்.

சுவாமியும் தண்ணீருடன் சங்கமித்துவிட்டார். சுவாமிகள் ஜலசமாதி அடைந்துவிட்டதாக பக்தர்கள் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையில் சுவாமிகள் கடலில் உள்ள நீர்ச்

சுழியில் அகப்பட்டு பக்தர்களை நோக்கி உதவிகேட்டே கை அசைத்திருந்தார். ஆனால் பக்கதர்களின் மூடநம்பிக்கை மாற்றி நினைக்க வைத்துவிட்டது. சுவாமிகள் இறக்க வேண்டியதாகிவிட்டது. பாவம் சுவாமியார்!!!

## பரிணாமம்

பிரளயத்தின் இன்னுமொரு முகம் பரிணாமம். பரிணாமம் என்பது மாற்றம் அல்லது வளர்ச்சி. மனிதன் தன்னை பரிணாமத்தின் உச்சம் என்று நினைக்கிறான். இது விவாதத்துக்குரிய ஒரு வாக்கியம்தான்.

மனிதனுடைய வாழ்க்கையை உன்னிப்பாக அவதானித்துப் பார்த்தால் எல்லாம் புரியும்.

வாழ்க்கை முழுவதும் வன்முறையும் போராட்டமும் அழிவும்தான்.

மனிதன் மட்டும் தன்னினத்தைத் தானே அழிக்கும் இயல்பு கொண்டவன். நீ பெரிதா நான் பெரிதா என்பதில் வேகமாக கொலை வரைக்கும் போகக்கூடிய தன்மை கொண்டவன்

மனிதன். மிருகங்கள் அப்படி இல்லை. நாய் நாயைக் கொல்வதில்லை. சிங்கம் சிங்கத்தைக் கொல்வதில்லை. புலி புலியைக் கொல்வதில்லை. மிருகங்களும் சண்டையிடு கின்றனதான். அவற்றினுடைய சண்டை யார் பலவான் என்பது மட்டும்தான். அது தெரிந்தவுடன் அவை விலகிக் கொள்கின்றன. மனிதன் அப்படி இல்லையே! அதற்குப் பிறகுதான் அவனுடைய நிசமான சண்டையே ஆரம்பிக்கிறது.

கொலை வெறி கொண்டலைகிறான்.

அவ்வளவெல்லாம் செய்து கொண்டு தன்னுடைய படைப்பு பரிணாமத்தின் உச்சம் என்று வேறு தம்பட்டம் அடித்துக் கொள்கிறான். இது எந்த வகையில் சாத்தியம்?

காவி கட்டியவுடன் தன்னைக் கடவுளென்கிறான். தன்னைக் கடவுளின் பிரதிநிதி என்று வேறு பிரகடனப்படுத்துகிறான். எப்படி?

இரண்டு பைத்தியங்களின் கதை எண்ணத்தில் வருகிறது.

ஒரு ஊரில் இரண்டு பைத்தியங்கள் இருந்தன. ஒரு நாள் ஒரு பைத்தியம் தன்னுடைய உடுப்புகளையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு எங்கோ அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. மற்றப் பைத்தியம் எங்கே போகிறாய் என்று கேட்க முதற் பைத்தியம் கடவுள் இரவு வந்து தன்னிடம்

வரும்படி கூறினவர் அதுதான் புறப்பட்டு கொண்டிருக்கிறேன் என்று கூறியது. உடனே இரண்டாவது பைத்தியம் சிறிது யோசித்துவிட்டு நான் உன்னை வரும்படி சொல்லவில்லையே என்றது.

முதலாவது பைத்தியம் கடவுளைக் கண்டதாகச் சொல்வதில் பெருமைகொண்டது. இரண்டாவது பைத்தியமோ தன்னையே கடவுளாக்கிக்கொண்டது.

இந்த நிலைதான் இன்றைய மனிதனின் நிலையும்.

மிருகங்கள் சண்டையிடும்போது தன்னோடு சண்டையிடுபவர் பலம் குறைந்தவர் என்று தெரிந்ததும் சண்டையை நிறுத்தி ஒதுங்கி விடுகின்றன. ஆனால் மனிதனோ தன்னுடன் சண்டையிடுபவர் பலங்குறைந்தவர் என்று தெரிந்தவுடன் இன்னும் வேகமாகச் சண்டையிட்டு அவரை அழித்து விடுவதில் முனைப்புக் காட்டுகின்ற நிரம்பத் தகுதிகுறைந்த செயற்பாட்டைச் செய்து கொண்டு தன்னைப் பரிணாமத்தில் உயர்வு கொண்டதாக கருதுவது எந்த வகையில் நியாயமாகப் படுகின்றது.

உலகின் எங்கோ ஒரு மூலையில் ஒவ்வொரு நிமிடமும் மனிதன் இன்னொரு மனிதனைக் கொலை செய்து கொண்டேயிருக்கிறான். அரசியலின் பெயரால் மதத்தின் பெயரால் ஈவிரக்கமின்றிக் கொலை செய்கிறான்.

எப்படி இந்த மனிதன் பரிணாமத்தின் உச்சியில் இருக்கமுடியும். சிந்திக்கப்படவேண்டிய நியாயமான ஒரு விடயமே.

காவிகட்டியவர்கள் எல்லாம் நியாயமாக நடந்து கொள்வதில்லை. எதை எதையெல்லாம் செய்யக்கூடாதோ அதையெல்லாம் கடவுளின் பெயரால் செய்கிறார்கள். காவிக்குள்ளே காமத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் ஆசைகளைத் துறப்பதில்லை. துறப்பதுபோல் பாசாங்கு செய்கிறார்கள். இவர்கள் மனிதகுலத்துக்கு தாங்கள் வழிகாட்டிகள் என்றும் கூறுகின்றார்கள். இதையெல்லாம் சாதாரணமாக எப்படி ஏற்றுக்கொள்வது.

கடவுளைப் பற்றிக் கதை பண்ணியவர்களும் எதிர்காலத்தில் மனிதன் செய்யக்கூடிய தவறுகளை நியாயப்படுத்தும் பொருட்டு கடவுள்களே அந்தத் தவறுகளைச் செய்ததாகக் காட்டி அவற்றை தவறாக மக்கள் மத்தியில் உலவ விட்டுள்ளார்கள். இந்த மனிதனும் செய்யவேண்டிய சகலதையும் செய்து விட்டு அதோ கடவுளே அதனைச் செய்யும்போது நான் ஏன் செய்யக் கூடாது என்று கூசாமல் கேட்கின்ற இழி நிலைக்குப் போய்விடுகிறார்கள். இவர்களைப் போய் பரிணாமத்தின் உச்சியில் உள்ளவர்கள் என்று சொல்வது நியாயம்தானா?

மனிதன் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அமைதியும் சாந்தமும் நிறைந்த வாழ்வை மனிதன் தன்னுடையதாக்கிக்

கொள்ளவேண்டும். பழிவாங்கும் எண்ணத்தை கைவிட்டு தீமை செய்தவர்களையும் அன்போடு பார்க்கின்ற மனநிலையை வளர்த்துக் கொள்ளவேண்டும். இது சாதாணமானதல்ல. இந்தப் பக்குவ நிலையை அடைவது இறைவனை நேரிலே பார்ப்பதற்கு ஒப்பானதாகும். என்னுடைய நண்பர் ஒருவர் சமீபத்தில் என்னைப் பார்த்து புதினத்தில் கட்டுரை வாசித்தேன் என்ன சூடாக இல்லையே என்று கேட்டார். எதனை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டேன். நான் யாரையும் குத்திக்காட்டி எழுதவில்லை என்பதுதான் அவரின் ஆதங்கம். இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள். பிரச்சினைகளோடு முட்டிமோதி வாழ்வது தான் வாழ்க்கை என்று எண்ணுபவர்களும் எம்மத்தியில் இருக்கிறார்கள். மனிதன் பரிணாமத்தின் உச்சவடிவமாக இருந்தால் இவர்கள் எல்லாரும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படியான ஒரு மாற்றம் நிகழாவிட்டால் நாம் பரிணாமம் அடையாத மிருகங்களை விடக் கீழ்நிலைக்குச் சென்றுவிடுவோம். மாற்றுவதும் மாறுவதும் இலகுவான விடயங்கள் இல்லை ஆனால் நிகழத்தானே வேண்டும்.

## உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்

தொண்டர் சீர் பரவுவார் என்று அநபாய குலோத்துங்கனால் அழைக்கப்பட்டவரும் சேவைக் காவலர் கங்கை குலத் திலகர் உத்தம சோழப்பல்லவர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட அருண் மொழித்தேவர் சேக்கிழார் திருநாகேஸ்வரத்தை தான் பிறந்த ஊராகிய குன்றத்தூரில் ஆலயமாகவும் வழிபாட்டுத் தலமாகவும் அமைத்த பெருமைக்குரியவர்.

சிவனுடைய தொண்டர்களின் சிறப்பைக் கூறவும் கடந்தகால வரலாற்றைப் பதியவும் குலோத்துங்க சோழனால் பணிக்கப் பட்டவர் சேக்கிழார்.

நம்பி ஆரூரரால் தொகுக்கப்பட்ட திருத்தொண்டத் தொகை யினையும் அதன் பின்னால் நம்பி ஆண்டார் நம்பிகளால்

திருத்தொண்டர் திருவந்தாதியாக தொகுக்கப்பட்ட நூலையும் ஆதார நூல்களாகக் கொண்டு சேக்கிழார் பெருமானால் 4233 பாடல்கள் கொண்டதாக திருத்தொண்டர் புராணம் அல்லது பெரிய புராணம் எழுதப்பட்டது.

கடல் அலைகளை எண்ணலாம் வானில் பறந்து திரியும் நட்சத்திரங்களை எண்ணலாம் கரங்கள் கொண்டு பெருங் கடல்களை எல்லாம் நீந்திக் கடக்கலாம் ஆழிக்குள் உள்ள மீன்களைக் கூட எண்ணிவிடலாம் ஆனால் திருத்தொண்டர் புராணத்தின் சிறப்புதனைக் கூற சேக்கிழாரைத் தவிர வேறு யாரால் முடியும். வானளாவிய சிந்தனை கொண்டவர்கள் தமிழர் 2000 - 3000 ஆண்டுகட்கு முன்பு தமிழர் நாகரிகம் கோலோச்சி நின்றவை யாவரும் அறிந்ததே. 3000 ஆண்டுகட்கு முன்பு தொல்காப்பியர் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்று கூறியதை நாம் நினைவு கூர வேண்டும்.

2000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை

*அகர முதல எழுத்தெல்லாம்*
*ஆதி பகவன் முதற்றே உலகு*

என்றே கூறினார்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் *மூவா முதலா உலகம் மூன்றும் ஏற்ப* என்றே தொடங்கினார்.

வளையாபதியில்

*உலகம் மூன்றும் ஒருங்கும் உடன் ஏற்ப*

என்று தொடங்கப்படுகிறது.

கவியரசன் கம்பன் தன் காவியத்தை

> ***உலகம் யாவையும் தாமிழவாக்கலும்***
> ***நிலை பெறுத்தலும் நீங்கலும் நீங்கலா***
> ***அலகிலா விளையாட்டுடையார்***
> ***அவர் அன்னவர்க்கே சரணம் தாங்களே***

என்று தொடங்குவதைக் காணலாம்.

ஆக தொல்காப்பியத்தில் திருக்குறளில் வளையாபதியில் சீவக சிந்தாமணியில் கம்பன் காவியத்தில் எல்லாம் உலகத்தை முதலாகக் கொண்டே காவியங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஏன் மேற்குலகிலிருந்து வந்த கிருத்துவரான வீரமாமுனிவர் தேம்பாவணியில்

*உலகம் மூன்றும் செய்தளித்து அழிக்கவல்லாய்..* என்றே கூறுகிறார்.

எட்டுத் தொகையில் ஒன்றான திரு முருகாற்றுப்படையில் நக்கீரர்

***உலகம் உவப்ப ..*** என்று தொடங்குவதைக் காணலாம். இதனால் எங்கள் சேக்கிழாரும்

***உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்***
***நிலவுலாவிய நீர்மலி வேணியன்***
***அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்***
***மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்***

என்கிறார். திருத்தொண்டர் புராணத்தில் 15 இடங்களில் உலகம் என்பதை அறிவுறுத்தி இருக்கிறார்.

திருஞான சம்பந்தர் புராணத்தில் 216ஆம் பாடலில்

***சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்***
***மீது தாழ்ந்து வெண்ணீற்று ஒளிபோற்றி நின்று***
***ஆதியார் அருள் ஆதலில் அஞ்செழுத்து***

ஓதி ஏறினார் ***உய்ய உலகு*** எலாம் என்று ஆணித்தரமாகக் கூறினார். முதலாவது பாடலில் கூட்டெழுத்துக்களாக வைத்து ஒவ்வொரு எழுத்துக்களையும் எண்ணுவோமேயானால்

63 எழுத்துக்கள் இருப்பதைக்காணலாம்.

பிரித்த சொற்களாக வைத்து எழுத்துக்களை எண்ணுவோமே யானால் 72 எழுத்துக்கள் இருப்பதைக் காணலாம்.

இவை 63 தனி அடியார்களையும் தில்லை வாழ் அந்தணர், பக்தராய் பணிபவர், முழு நீறு பூசிய முனிவர், பொய்யடிமை இல்லாத புலவர், முப்போதும் திருமேனி தீண்டுவார், பரமனையே பாடுவார், திருவாரூர் பிறந்தார் அப்பாலும் அடி சார்ந்தார், சித்தத்தை சிவன்பால் வைத்தார், ஆகிய ஒன்பது தொகை அடியார்களையும் சேர்த்து 72 அடியார்களைக் குறிப்பதற்காக 72 எழுத்துக்கள் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது.

இறுதிப் பாடலில்

***என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்***
***ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட***
***மன்று உளார் அடியார் அவர்வான் புகழ்***
***நின்றது எங்கும் நிலவி உலகெலாம்***

இறுதியாக பலவிதமான காவியங்களில்

சிலவற்றில் உலகைக் காணலாம்

சிலவற்றில் உயிரைக் காணலாம்

சிலவற்றில் கடவுளைக் காணலாம்

உலகு, உயிர், கடவுள் மூன்றையும் ஒன்றாகக் காண்பது பெரிய புராணத்தில் மட்டுமே.

# கவிதைகள்

# கவிதை

கவிதை மனித உணர்வுகளின் வெளிப்பாடாகும். ஒரு மனிதன் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த கலை வடிவம் கவிதையாகும். எந்த ஒரு கலை வடிவமும் மக்களைவிட்டு விலகி நின்று நிலைக்க முடியாது. கலை கலைக்காக என்ற கோசம் அர்த்தமற்றது. கவிதை மக்களுக்குள் ஐக்கியமாகிவிட வேண்டும்.

எப்படி இது சாத்தியமாகிறது?

சாதாரண பாமர மக்கள் புரிந்து கொள்ளும் படியாக நாம் கவிதை பண்ணும்போது அவர்கள் அதை உள்வாங்கிக் கொள்கிறார்கள். இவை காலத்தைம் கடந்து வாழ்கின்றன.

பாரதியின் கவிதைகள் இதற்கு சான்றாக உள்ளன.

கவிதைகள் வெறுமனே சொற்களின் கூடாரமாக இருக்கக் கூடாது. கவிஞன் சொற்களுக்குப் பின்னால் அணிவகுக்கக் கூடாது.

உங்கள் உணர்வுகளுக்குத் தீனியாக சொற்கள் உங்களைத் தேடி வரவேண்டும்.

எங்களுடைய மஹாகவியின் கவிதை ஒன்றைப் பாருங்கள்.

*சிறு நண்டு மணல் மீது*
*படம் ஒன்று கீறும்*
*அதை வந்து சிலவேளை*
*கடல் கொண்டு போகும்*

மிகமிக இலகுவான அன்றாடப் பழக்கத்திலுள்ள சொற்களைக் கொண்டு என்ன அழகாகக் கவிதை புனையப்பட்டுள்ளது.

கவிதைகளில் கருத்து ஒளித்து விளையாடக் கூடாது.

இன்னுமொரு கவிதையைப் பாருங்கள்.

*காலை கண்ணை விழிக்கின்றேன்*
*கதவு திறந்து வருகின்றேன்*
*படியில் வெய்யில் வீழ்கிறது.*

இது காலை எழுந்ததும் காணும் காட்சி கவிதையாக்கப் பட்டிருக்கிறது. இது கவிஞனின் ஆளுமை.

'எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருப் பது கவிதையின் வேலை இல்லை. கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு இந்தக் கலைத் தத்துவம் புரிவதில்லை.' என்கிறார் அப்துல் ரகுமான்.

இவரது இந்தக் கருத்தோடு ஐக்கியப்பட என்னால் முடிய வில்லை. புத்தி ஜீவி வர்க்கத்துக்கு ரகுமானின் கருத்து உடன்பாடாக இருக்கலாம். பாமர மக்களுக்கல்ல. கட்டுரை சொல்லும் ஒரு விடயத்தை கவிதையில் சொல்லலாம். கவிதையில் சொல்லப்பட்ட விடயத்தை கட்டுரையாகவும் சொல்லலாம். சொல்லும் பாணி மட்டுமே வித்தியாசப் படுகிறது.

இலக்கிய'ம் என்பது அமைதியான தென்றல் வீசும்போது அசைந்து செல்லும் நீரோடைபோன்றது. இன்றைய காலத்தில் வெளிவரும் பெரும்பான்மையான கவிதைகள் நொடிகளாக இருக்கின்றன.

கருத்து மிக ஆழமாக மறைந்து நிற்கிறது. சமூகப் பார்வைகள் இல்லாமல் சுய புலம்பல்களாக இருக்கின்றன.

வெறும் கற்பனாவாத மாயையில் பெரும்பாலான கவிஞர்கள் சிக்கி உள்ளமை கவலைக்குரியதாகவே உள்ளது.

காலத்தைக் கடந்து வாழக் கூடிய கவிதைகள் அருமை பெருமையாகவே வருகின்றன.

கவிஞர்கள் விழிப்படைய வேண்டும்.

அதுவும் இன்று முகநூல் தமிழ் தெரிந்த எல்லோரையும் கவிஞர்களாக்கி உள்ளது. ஒரு படம் இருந்தால் போதும் அதை வைத்து சொல்லுகளைத் தேடித் தேடிக் கோர்த்து கவிதை என்ற பெயரில் பதிவு செய்து விடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் நண்பர்கள் என்ற பெயரில் ஒரு குழாம். ஆகா ஓகோ என்று பாட்டுப் பாடிவிடுகிறார்கள். இந்த நிலை நிச்சயமாக மாறவேண்டும். இல்லாவிட்டால் எமது இலக்கிய பாரம்பரியம் பலவீனப்பட்டுவிடும்.

# ஓ! என் இனிய தமிழே!

ஓ! என் இனிய தமிழே!
இளசு குலுங்கும் உனது அழகில்
'மறு' ஏனம்மா?
காவல் பார்த்த காவலர்கள்
காதல் மயக்கத்தில் தூங்கினரோ?
'கள்ளர்... கள்ளர்' என்று பல தடவை
கத்தினேன்... கத்தினேன் கன்னித் தமிழே!
கண்ணை ஏன் சிமிட்டினாய்?
களவாணிகள் உன்னை அணைத்து
ஆடை களைந்து...
நீ முனக-நிலவு முகம் சுருங்க
ஓ! என் நிலவுத் தமிழே

நெருப்பான உன் கற்புக்கு
நெருப்பு வைத்தது
சத்தியமாய் உனக்குத் தெரியாதா?
ஓ! என் இனியவளே!
கேட்கிறதா என் சத்தம்!
நான் உன்னுடைய பிம்பம்!!

## நீ எப்போது என்னுள் வந்தாய்?

நீ எப்போது எனக்குள் வந்தாய்?
என்னை நீ நடத்திச் செல்கிறாய்
உன் கரங்களைப் பிடித்தபடி
நான் அசைகின்ற ஒவ்வொரு கணமும்
என் நரம்புகள் எல்லாம் புடைத்துப் போகின்றன.
நான் விண்ணை நோக்கின் நீ அங்கே இருக்கிறாய்
நான் மண்ணைப் பார்க்கின்ற போது
நீ அங்கேயும் இருக்கிறாய்...
அங்குமிங்கும் இருக்கிறாய்...
என்னுள்ளும் இருக்கிறாய்! எப்படி?
தூங்கும் போது கனவில் வருகிறாய்
தூமகேதுவாய் ஒளிர்கின்றாய்! நான்

ஏங்கும்போது அணைத்துக் கொள்கிறாய்..
உன் அணைப்பில்தான் எத்தனை சுகம்..
நீ எப்போ வருகிறாய்? எப்போ போகிறாய்?
புரியாமல் தவித்துப் புழுங்கிப்போகிறேன்!!
உன் வாசற்கதவுகளை மெதுவாகத்
திறந்து வை. நான் காற்றாக உள் நுழைவேன்.
உன் நாடிகளும் நரம்புகளும் அதிர்ந்துபோகும்!
குடல்கள் தடுமாறிச் சுழலும்!
நரம்புகள் மிருதங்கம் வாசிக்கும்
விரசம் உன்னுள் வீரியம் அடையும்போது
நான் அமைதியாய் உன்னுள் உறங்கிக் கொண்டிருப்பேன்

## வேரோடு நாம் பெயர்ந்தோம்

வேரோடு நாம் பெயர்ந்தோம்
வேதனையில் நாம் மிதந்தோம்
யாரோடு பேச உள்ளோம்
யாருக்கினி மண்ணைக் கேட்போம்
தேரோடும் எங்கள் நல்ல
தெம்மாங்குத் தெருக்க ளெல்லாம்
சேறாடும் செம் மண்ணானால்
சேருமிடம் புரியவில்லைச் செந்தமிழே!
சுத்திச் சுத்தி நாங்களங்கு
கிட்டிப்பொல்லு அடித்த மண்ணில்
தத்தித் தத்தி எங்கள்பிள்ளை
தவண்ட அந்தத் தமிழ்மண்ணில்

பச்சைமரம் குலுங்கி நின்று
மாங்கனிகள் தொங்கி யாடும்
மாபெரிய தோட்டம் எல்லாம்
மண்ணுக்குள்ளே துயின்ற போது
வேரோடு நாம் பெயர்ந்தோம்
வேதனைகள் கொண்டழுதோம்
ஊரோடு நாம் சேர்ந்து
ஊர்ஊராய் நகர்ந்து சென்றோம்
யாரோடும் உறவின்றி வேலிக்குள்
ஏதிலிகள் போல்ஐயோ அடைபட்டோம்
வேரோடு நாம் பெயந்தோம்
வேதனைகள் கொண்டழுதோம்

## ஏன் தமிழே!

மன்னர்கள் ஆண்ட தமிழ்மொழியே - எங்கள்
மக்கள் இதயத்தின் செம்மொழியே!
இன்னல்கள் தீர்த்திடும் தமிழ்மொழியே- எங்கள்
இதயத்தைக் கோலோச்சும் செந்தமிழே!
கரும்புக்கு மேலான காதல்மொழியே - எங்கள்
விருப்புக்குச் செவிசாய்க்கும் வீரமொழியே!
அருவத்தான் ஆள்கின்ற பக்திமொழியே-எங்கள்
அன்புக்கு அர்த்தமான செம்மொழியே!
முருகனை ஆள்கின்ற நற்றமிழே - எங்கள்
அதிகாரத் தொனிசொல்லும் அமுதமொழியே
கல்லைத் தெப்பமாக்கிய பக்திமொழியே!-எங்கள்
சொற்களில் உயிர்வாழும் சொர்ப்பனமே!

வல்லினம் வளைக்கும் செந்தமிழே - எங்கள்
வளமெல்லாம் நுழைந்தாடும் சுந்தரத்தமிழே
சொல்லினில் சிவனான செந்தமிழே - எங்கள்
சொர்க்கத்துள் சொந்தமான சோகத்தமிழே!
தோற்றாலும் தோற்காத வெற்றித்தமிழே-எங்கள்
தோல்வியிலும் துவளாத செந்தமிழே!
போற்றாத புலவரெல்லாம் போற்றிடவே - நீ
போர்ப்பரணி பாடிவா பொற்றமிழே

## சேகுவேரா

உழைப்பவன் நெஞ்சுள் படிந்துள்ள
உண்மையைப் பகன்ற மானிடன்
ஏழைகள் உலகத்தின் ஏணிப்படியிவன்
எங்கள் ஏந்தலிவன் மகாராஜன்
கோழைகள் கொண்ட நெஞ்சுக்குக்
கோடி அம்பு களெய்தவன்
வாழையடி வாழை யென
வளரும் தத்துவம் பகன்றவன்
உழைப்பவன் உழைப்பை உறிஞ்சும்
உதவாத உன் மத்தர்களை
களைக்க வைத்துக் களையெடுத்தவன்
உழைப்பவர் கதைக்கு நாயகனிவன்

துப்பாக்கி எடுத்தலின்றி துயர்களைய
எப்போதும் முடியா தென்று
தப்பாமல் சொன்ன இவன்நெஞ்சை
துப்பாக்கி துளைத்த துயரமென்னே!

## விடுதலைக் கனவு

பெண்ணைத் தெய்வம் என்றார் - அப்
பேதையின் உரிமையை பெட்டியில் பூட்டினார்
கண்ணுக்குச் சமன் பெண்ணென்றார் - ஈற்றில்
கவிதையில் மட்டுமே பெண்ணைப் போற்றினார்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்றார் - நாட்டில்
பெண்ணைப் பரிகசித்து வேதனை கொடுத்தார்
எண்ணிற் பெருமை கொண்ட பெண் - இவள்
என்றுதான் விடுதலையை ஸ்பரிசிப்பாளோ!
உழைப்பவரை உதைத்தார்கள் - அவன்
உழைப்பினிலே ஆகாரம் புசித்தார்கள்
வேர்வை விவசாயி நிலத்தில் சிந்தினான் - அவன்
இரத்தத்தில் இதயமற்றோர் குளிக்கின்றார்

உழைக்கும் இவ்வர்க்கத்தார் இன்னும் - தங்கள்
உணவுக்கு அல்லாடி உயிரைத் துறக்கின்றார்
உழைப்பவர்கள் கரங்களினைப் பலமாக்குவோம்- அவன்
விடுதலையை மூச்சாக மனதிற் கொள்வோம்
மானிடரின் விடுதலையை நேசிப்போம் - மனித
விடுதலையை நிசத்திலே காண்போம்.

## மணலாகிப் போனேன்!

அன்று காலை அதிகாலை வேளை
நின்று நிமிர்ந்து நிலையில் கைவைத்து
மிண்டு கொடுத்து முதுகை நிமிர்த்தி
திண்டு கொழுத்த உடம்பில் தினவெடுத்து
நின்றுயன்னலால் தலைநீட்டி வீதிப்பக்கம்
எட்டிப் பார்த்தேன் எழிலானகாலை
முட்டிமோதி முறுவல்பூத்து நின்றது.
கொண்டுவந்த மடலை கையிற்தந்து
நின்றுநிதானித்துத் தபாற்காரன் சென்றான்.
மண்டுநான் மனங்களித்துத் தபாலைப் பிரித்தேன்
மணலாகிப்போனேன்!
கண்கள் குளமாகி காது செவிடாகி

எண்ணம் எங்கோ சென்று எங்கள்
மண்ணில் நடந்த மாபெருங்கொடுமை பார்த்து
புண்ணில் வேலாய் துடிதுடித்துப்போனேன்!
எத்தனை கதைகள்! எத்தனை சரித்திரங்கள்!
அள்ளிக் கொடுத்தவன் தமிழனென்றும்
வெள்ளியன்றியவன் வேறெதுவும் கொடுத்தறியாப்
பள்ளிகொண்ட சோழன் பழங்காலத் தமிழன்
பிள்ளைக்கு உணவின்றிப் பேதலித்துப் பின்னே
கள்ளிச்செடி எடுத்துக் கரைச்சுக் குடித்ததினால்
துள்ளித்துடித்து இறந்ததுவாய் அம்மா எழுதியிருந்தாள்
கண்ணீர் வழிந்து துளிகளாய் மாறிற்று!
மண்ணை நினைந்து மனம் வாடிப்போனேன்!
இங்கே
லண்டன் மாநகரில் லட்சம்பேர் தமிழர்!
என்றாலும் இவர்கூடச் சோழர்வழிதான்!
என்னருமைத் தமிழர்களே நண்பர்களே!
மண்டுகளாய் வாழ்ந்து மனிதர்களாய் வாழ்வதாய்
குண்டுச் சட்டிக்குள் தடிபோட்டு ஆட்டுகின்றீர்!
வேண்டாம் நண்பர்களே! வாருங்கள் பூமிக்கு!
நன்றாக நாம் சேர்ந்து நம்மினத்தைக் காப்போம்.
ஒன்றாக நாம் நின்றால் ஓங்குபவர் நாம்தானே!
வென்றாகவேண்டும் இல்லையெனில் மடிந்தாக வேண்டும்!
நன்றாகச் சிந்தித்து நல்லவரே கூடுங்கள்!

## இன்னுமா உனக்குப் புரியவில்லை?

நீ நிலவைத் தேடிப் புறப்பட்டவன்.

நான் நிலவில் இருந்து உன்னைப் பார்த்தவன்

பாதைகள் கரடு முரடு.

நேசமுள்ள மனிதர்கள் விட்டுவிட்டு

நேரங்கடந்த சிந்தனையில்

நிலவுக்கு வருகிறாய்.

நிறுத்தி விடு

கனவுலகத்தை விட்டு வெளியே வா

நீ கட் புலன்களை இழந்து விட்டாய்!

அநியாயங்களைக் கண்டு அலுத்துப் போகிறாய்

மறைந்திருந்து வாலியைக்

கொன்றவன் தானே ராமன்!

மங்கை திரௌபதையை
பகடைக் காயாக்கியவர்கள் தானே பாண்டவர்!
பெற்ற பிள்ளையை கடலிலே விட்டவள் தானே குந்தி!
ஐவருக்கு முந்தானை விரித்தவள் தானே
திரௌபதி!
இவர்களெல்லாம் இன்று
நல்லவர்-
வல்லவர்-
கற்புக் கலையாதவர்-
பெரியவர் - முனிவர் - பேரன்புடையோர்
என்றெல்லாம் கூறுகிறார்களே!
நீ ஏன் கலங்குகிறாய்!
இவர்களின் முன்னால் நீ கோபுரம்!
உழைப்பவனுக்காகப் போராடினாய்!
பெண்களைத் தெய்வமெனக் கருதினாய்!
தனி ஒரு மனிதனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடத் துடித்தாய்!
நாட்டுக்காக உன் குடும்பத்தையே!
பலிக்கடாவாக்கினாய்!
அப்படியே தொடரு உன் பயணத்தை!
நிலவுக்கு நீ வா!
நிம்மதியை நான் தருகிறேன்.

நான் யார் என்று உனக்குத் தெரிகிறதா?
உன்னுடைய நினைவுகளுக்குள் அமிழ்ந்திய
ஆத்மா என்று ஏன் உனக்குப் புரியவில்லை!
இதயம் சிலவேளை ‘டப்டப்’ என்று அடிக்கும்
அந்த அடிப்புகளில் நீதானே ஒலியாக இருக்கிறாய்
இன்னுமா உனக்குப் புரியவில்லை!
இதயம் உனக்கு இன்னுமா அடிக்கவில்லை.
கோட்டுக்குள் ஏன் நிற்கிறாய்?
கோடைக் கீறியவனும் நீ தானே?
எட்டிப் பார்!
எத்தனை சௌந்தர்யங்கள் வெளியில்!
இன்னுமா புரியவில்லை நீ யாரென்று?

## இத்தனைக்கும் பின் ...

இத்தனைக்கும் பின்
எத்தனை துயரங்கள்
அத்தனையும் மனதை வருத்தச்
சித்தம் கலங்கிச் சிரந்தாழ்ந்து
சுத்தமாக உலகை வெறுக்கும் ஒரு
வெற்றுலக மாயையில் மயங்கிப்போன
கற்றுக்குட்டி நான் தரும்கவிதை
பிரசவகளத்தில் ஒரு நிறைப் பிரசவமே!
தோற்றுப்போன துயரத்தில்
மாற்றானின் வெடிச் சத்தங்களில்
நேற்று நடந்த அந்தக் களேபரத்தில்
துண்டுதுண்டாக நான் வெடித்தபோதும்

சற்றும் நாணமின்றி மாற்றான்
முற்றத்தில் கபடிவிளையாடிக் குதூகலித்த
சேற்றில் பிறந்த அந்த உன்மத்தர்களை
இத்தனைக்குப் பின்னும் மானிடனென்று
சத்தமாகச் சொல்வது சகிக்காமல் துவண்டேன்
கரவெட்டிக் கிராமத்தில்
கன்பொல்லை முற்றத்தில்
உரத்துச் சாதியை
ஊரறியக் கத்தியவன்
சேரன்வழி வந்த செந்தமிழனென்று
மார்பில் அடித்தச் சொல்லும் போதெல்லாம்
நெஞ்சில் ரத்தம்வழிய நான் துடித்தேன்
இத்தனைக்குப் பின்னும் அவனுக்கு
ஓட்டுப் போட்டுக் கள்ளர் குகைக்கு
அனுப்பியவர் அறியாமை கண்டு
வெடித்துச் சிதறினேன் கண்ணிவெடியாய்
உழைப்பவர்க்கே உலகம் சொந்தமென
அழைத்தவர்கள் எல்லார்க்கும் சிவப்புச் சாயம்
மேதினத்து நாளதனில் மாபெரும் ஊர்வலங்கள்.
சிவப்பாலே தங்களை நனைத்தவர்கள்
ஏராளம்! ஏராளம்!
சிவப்புக்கள் நீந்திய முள்ளி மனிதரை

அவம் என்று கத்திய அரைகுறைச் சிவப்புகள்
மானிடர் மலையாகச் சரியும் போதில்
நான்கு சுவருக்குள் நல்ல ஐந்து நட்சத்திரத்தில்
கூடிக் கும்மாளமிட்டு கூவிய போதெல்லாம்
இத்தனைக்குப் பின்பும் இவர்களைத்
தலையிற் சுமந்து சன்னதமாடுதலைப் பார்த்து
நானே இறந்து கொதித்துப் போனேன்.

# நாடகம்

# தமிழ் படும்பாடு

***பாத்திரங்கள்:***

***தருமர் செல்லம்மா சிந்தாமணி சந்திரன் கமலா***

***சூழ்நிலை:***

குடும்பமாக இருந்து கதைக்கிறார்கள்.

***தருமர்:***

இந்த நாட்டிலை வேலை செய்யேலாதப்பா!

***செல்லம்:***

ஏனப்பா ஏதும் பிரச்சினையே?

***தருமர்:***

அவன் முதலாளி ஒரு முசுடு. எல்லாத்திலையும் பிழை கண்டு பிடிக்கிறான். அதைத் தொட்டால் குற்றம். இதைத் தொட்டால் குற்றம். அப்ப நான் என்னதான் செய்யிறது.

*செல்லம்:*

எங்களுக்குக் காசுதானப்பா முக்கியம். அவன் என்னத்தையும் சொல்லட்டும். கண்ணை மூடிக்கொண்டு அவன் சொல்லி றதை இந்தக் காதாலை கேட்டு அந்தக் காதாலை விடுங்கோ.

*தருமர்:*

அப்பிடித்தான் செய்யிறன். இல்லையெண்டால் எப்பவோ முதலாளியைப் பெட்டிக்குள்ளை படுத்தியிருப்பன்.

*செல்லம்:*

ஆத்திரப் படாதையுங்கோ.. பெட்டையளையும் பெத்துப் போட்டு மூளை கெட்டதனமாய் நடக்கக் கூடாது.

(தருமர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு..)

*தருமர்:*

எங்கையப்பா பிள்ளையளைக் காணம்.

*செல்லம்:*

மூத்தவளுக்குச் சோதினையாம் ஆரோ படிக்கிற பிள்ளை யிட்டை புத்தகம் வாங்கப் போயிட்டாள். இளையவள் ரென்னிஸ் பழகப் போயிட்டாள். தம்பி உங்கதான் நிண்டவன்.

*தருமர்:*

களைப்பாயிருக்கு ஒரு தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாவன்.

*செல்லம்:*

(தேத்தண்ணி கொண்ட வந்தபடி) இஞ்சரும் கதையோடை கதை மறந்து போனன்.. உங்கடை கொக்கா கடிதம் போட்டிருக்கிறா. கொக்காவின்ரை மூத்தவள் சாமத்தியப் பட்டிட்டாளாம்.. காசு அனுப்பச் சொல்லி எழுதியிருக்கிறா..

*தருமர்:*

இஞ்சை ஏதோ மரத்திலை காசு முளைக்கு தெண்டு நினைக்கினமே.. எதுக்கெடுத்தாலும் காசு...காசு...காசு

*செல்லம்:*

என்ன செய்யிறது.. தங்கடை கஸ்டத்திலைதானே கேட்குதுகள்

(மூத்த மகள் சிந்தாமணி வருகிறாள்.)

*சிந்தா:*

அம்மா

*தருமர்:*

என்ன சிந்து இவ்வளவு நேரமும் எங்க போனனீ? என்ன சோதினைக்கெல்லாம் படிச்சாச்சோ

*சிந்தா:*

ஓரளவுக்குப் படிச்சிட்டன். ஒரு பாடந்தான் கொஞ்சம் பிரச்சினை. மற்றும்படி ஓகே..

***தருமர்:***

நாளைக்கு எல்லாரும் வீட்டை நில்லுங்கோ சரஸ்வதி பூசை

***செல்லம்:***

மெய்யேப்பா பக்கத்து வீட்டுக்காரருக்கும் சொல்லட்டே

***தருமர்:***

நான் கொஞ்சம் படுக்கப்போறன்.. ஆர் வந்தாலும் எழுப்பாதை...

(காலை நேரத்தைக் குறிக்கும் இசை)

*சூழ்நிலை:* சரஸ்வதி பூசை

***பாத்திரங்கள்:***

***செல்லம்மா தருமர் யோகன் சிந்தாமணி சந்திரன் கமலா***

***தருமர்:***

எங்கையப்பா சந்திரனைக் காணயில்லை. சரஸ்வதி பூசையும் அதுவாய் எங்கை போயிட்டான்.

***செல்லம்:***

இப்பதான் பிள்ளையின்ரை யோசினை வருகுதாக்கும். இவ்வளவு நாளும் அவன் என்ன செய்தான் எண்டு ஒரு வார்த்தை இல்லை.

***தருமர்:***

இஞ்சர் செல்லம்மா விசர்க் கதை கதையாதை நான் என்ன சும்மாவே இருக்கிறன். அங்கையும் இங்கையும் ஓடி நாய்படாப்

பாடுபட்டு உங்களுக்குத்தானே நாலு காசு சேர்க்கிறன். ஏதோ நான் காலுக்குமேல் கால் போட்டுக் கொண்டிருக்கிற மாதிரியும் நீ இஞ்சை வெட்டிப் புடுங்கிற மாதிரியும் எல்லே கதைக்கிறாய்.

*சிந்தா:*

சரி..சரி.. உங்கடை சண்டையை நிறுத்துங்கோ சந்திரன் வந்திட்டான்.

*செல்லம்:*

பிள்ளை கமலா நீ போய் அந்தக் கடலையை எடுத்து வந்து சாமிப்படத்துக்கு முன்னாலை வையம்மா

(காட்சி மாற்றம்)

திரை அப்படியே இருக்க மேடையில் இருப்போர் நிலையாக ஆடாமல் அசையாமல் இருக்க நாரதரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் உள்ளே வருகிறார்கள்.

---

*நாரதர்:*

நாராயணா.. ..நாராயணா.

*சுந்தரர்:*

நாரதரே என்ன இது கூட்டமாக மனிதர்கள் நிற்கிறார்களே.

***நாரதர்:***

பிரபு.. இன்று கலைமகளுக்கு மனிதர்கள் ஆராதனை செய்கிறார்கள். சற்று அமைதியாக நின்று நடக்கின்ற வினோதங்களைப் பாருங்கள்.

---

(நாரதரும் சுந்தரரும் மேடையின் அருகில் நிற்கிறார்கள்)

***தருமர்:***

பாட்டி எங்கை... சிந்தாமணி போய் பாட்டியைக் கூட்டிக் கொண்டு வா

***செல்லம்:***

எடேய் சந்திரா புத்தகத்தைக் கொண்டு வந்து வையனடா

***சந்திரன்:***

உம்.. புத்தகத்தை உதிலை வைச்சுத்தான் நாங்கள் கிழிக்கப் போறம்

***செல்லம்:***

இஞ்ச சந்திரன் நல்ல நாளிலை உன்ரை விதண்டாவாத கதையள் வேண்டாம். பேசாமல் சொன்னதைச் செய்

***சந்திரன்:***

முட்டாள் தனமாய்ச் செய்யச் சொல்லிறியள்.

*சிந்தா:*

அம்மா பக்கத்துவீட்டு அன்ரி பூசையைப்பற்றிக் கேட்டவ. வரவிருப்பம்போல கூப்பிடட்டே.

*தருமர்:*

இல்லைப் பிள்ளை அவயளை அம்மா கூப்பிட்டவ வருவினம்.

(சிந்தாமணி வெளியில் போகிறாள்..)

*செல்லம்:*

பக்கத்து வீசட்டுச் சனம் நாங்கள் இந்த வீட்டுக்கு வந்த மூண்டு மாதமாய் ஒண்டும் கதைக்கயில்லை. இப்ப என்னவோ வலியக் கதைக்கினம்.

*தருமர்:*

இஞ்சரும் செல்லம் சும்மா மனிசரை நெடுகச் சந்தேகத்தோடை பாராதையும்.. அது மனிசியைப் பார்த்தால் அப்பிடித் தெரியேல்லை. நல்ல செந்தழிப்பான முகம்.

*செல்லம்:*

ம்... ஆரும் ஒரு பெண்புரசு சிரிச்சால் போதும் செந்தமிழ்ப் பெண்ணெண்டு கவிதையே பாடிப்போடுவியள். அலுவலைப் பாரும்.

---

*சுந்தரர்:*

என்ன நாரதர் இன்னும் பூசை ஆரம்பிக்கக் காணோம்

*நாரதர்:*

பொறுங்கள்.... மனிதர்கள் இப்போ இப்படித்தான்... கலைமகள் அவர்களுக்காகக் காத்திருக்க வேண்டும்.

---

*தருமர்:*

வாருங்கோ.. வாருங்கோ

*செல்லம்:*

வாருங்கோ...வாருங்கோ உங்கடை பெயரும் எனக்குத் தெரியாது.

*தமிழ்ச்செல்வி:*

என்ரை நேம் தமிழ்ச் செல்வி

*செல்லம்:*

ஒ...நல்ல பெயர்.. நீங்கள் இந்த நாட்டுக்கு வந்து கனகாலம் போல..

*தமிழ்ச் செல்வி:*

யா...ருவன்ரி சிக்ஸ் இயர்ஸ்..

*தருமர்:*

உங்கடை கஸ்ட்பண்ட் வரவில்லையோ

*தமிழ்:*

அவர் வருவர்.. ரெலிபோனிலை ..

*செல்லம்:*

உங்களுக்கு நாலு பிள்ளையள் போல..

*தமிழ்:*

யா...ரூ போய்ஸ் அன்ட் ரூ கேள்ஸ்..

*தருமர்:*

உங்கடை பிள்ளையிளின்ரை புத்தகத்தையும் கொண்டு வந்து வையுங்கோ.

*தமிழ்:*

நோ..நோ..எங்களுக்கு இதுகளிலை நம்பிக்கையில்லை.

*சிந்தா:*

அப்பா பூசை தொடங்குவமே...

*தருமர்:*

பொறம்மா பக்கத்து வீட்டு அங்கிளும் வரட்டுமே

*தமிழ்:*

நோ நோ..நீங்கள் ஸ்ராட் பண்ணுங்கோ...கீ இஸ் நொட் தற் கீன் ஒன் தீஸ் மற்றேர்ஸ்..

(பூசை ஆரம்பமாகிறது)

***தருமர்:***

தம்பி ஒரு தேவாரம் பாடு

***சந்திரன்:***

*சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்*
*நற்றுணையாவது நமச்சிவாயவே*

***செல்லம்:***

தம்பி ரஜீவ் நீரும் ஒரு தேவாரம் பாடும்.

***தமிழ்:***

நோ நோ அவருக்கு உதெல்லாம் தெரியாது.

***செல்வம்:***

என்ன நீங்கள் பிள்ளைக்குத் தேவாரம் சொல்லிக் குடுக்கிற தில்லையே.

***தருமர்:***

சரி சரி இப்ப ஏன் உதெல்லாம்.

(தீபாராதனை காட்டப்படுகிறது.)

---

*நாரதர்:*

பார்த்தீர்களா சுவாமிகள் நிலைமையை.

*சுந்தரர்:*

ஆமாம் வியப்பாக இருக்கிறது. நானும் சம்பந்தரும் அப்பரும் எத்தனை தேவாரங்கள் பாடிச் சென்றிருக்கிறோம்... அவற்றில் ஒன்று கூடவா தெரியாது.

*நாரதர்:*

ஆம் சுவாமிகள்.. இன்றைய மனித உலகம் நீங்கள் நால்வரும் உலகுக்களித்த தேவார திருவாசகங்களை மறந்து விடுகிறார்கள்.

*சுந்தரர்:*

இது நல்லதற்கு இல்லையே!

---

(பூசை முடிந்து பிரசாதம் வழங்கப்படுகிறது)

*தமிழ்:*

(மொபைல் போனில்) கலோ நந் நான்தான் தமிழ்..வை டோன்ற் யூ கம் அன்ட் ரேக் சம் பிரசாதம்.. வட் யூ ஆர் கோயிங் சம் வெயர்.. ஓகே கம் ருத கதவு..ஐ கிவ் சம் பிரசாதம்....

(தமிழ்ச் செல்வி பிரசாதம் எடுத்துக் கொண்டு போகிறாள்)

*செல்லம்:*

என்னப்பா மனிசி தமிழையும் இங்கிலிசையும் கண்டபாட்டுக்கு கோப்பிக்கை சீனி கலந்த மாதிரிக் கலக்குது..

*தருமர்:*

உமக்கேன் ஊர் வம்பு.. எப்படியும் கலக்கட்டுமன் உம்மடை பாட்டிலை நீர் இரும்.

*தமிழ்:*

(திரும்ப வந்து) ஓகே நாங்கள் போயிட்டு வாறம்.. தாங்ஸ்.

(அவர்கள் போனதும். இதுவரை ஒழித்து நின்று அவதானித்த சுந்தரரும் நாரதரும் வெளிப்பட்டு அவர்கள் வீட்டுக்குள் வருகின்றனர்.)

---

*நாரதர்:*

ஓம்.. நாராயணா

*சுந்தரர்:*

(கை கூப்பியபடி தேவாரம் பாடிக்கொண்டே வருகிறார்)

(குடும்பத்தார் எல்லோரும் அவர்களை வியப்போடு பார்க்கின்றனர்)

*நாரதர்:*

நான் தான் நாரதர்..

***செல்லம்:***

அது பார்க்கத் தெரியுது.

***நாரதர்:***

இவர்தான் சுந்தர மூர்த்தி சுவாமிகள். இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர்.. நானும் இவரும் உலக மனிதர்களை ஒருதரம் பார்த்துச் செல்லலாமென்று வந்திருக்கிறோம்.

***சுந்தரர்:***

முதலில் நாம் இலங்கைக்குப் பாடல் பெற்ற தலங்களைத் தரிசிக்கச் சென்றிருந்தோம்.. நிரம்பத் துன்பமாக இருந்தது. பல ஆலயங்கள் இடிந்து போய் இருக்கின்றன. பல ஆலயங்களுக்கு வழிபட வர மனிதர்கள் பயப்படுகிறார்கள். அதன் பின்பு இங்கு வந்திருக்கிறோம்.

***நாரதர்:***

உங்கள் வீட்டில் பூசை நடப்பதைக் கண்ணுற்றோம்.. வந்துவிட்டோம்..

***தருமர்:***

நாங்கள் செய்த பாக்கியம் நீங்கள் எங்கள் இல்லம் தரிசனம் செய்துள்ளீர்கள்..செல்லம் சந்திரன் சிந்தாமணி வந்து விழுந்து கும்பிடுங்கோ.

*சுந்தரர்:*

உங்கள் மகன் பாடிய தேவாரம் நன்றாக இருந்தது.. நாங்கள் மேலும் பல இடங்களுக்குச் செல்லவுள்ளோம்.. மீண்டும் வருவோம்..

---

(நாரதரும் சுந்தரரும் போய்விடுகிறார்கள்)

*செல்லம்:*

என்னப்பா...உவை ரண்டுபேரும் உண்மையான நாரதரும் சுந்தரருமே.. ஏதோ நாடகத் தாலை இடையிலை வந்த மாதிரி இருக்கினம்.

*தருமர்:*

இஞ்சரும் சும்மா சந்தேகப் படாதையும் நம்பிக்கைதான் முக்கியம்.

(செல்லம்மா உள்ளுக்குள் போய் சுளகு எடுத்து வந்து அரிசி பிடைக்க ஆரம்பித்தாள். தருமர் பேப்பரோடு இருக்கிறார். சிந்தாமணி வீட்டைக் கூட்டுகிறாள்.)

*தருமர்:*

பத்திரிகைச் செய்திகளைப் பார்க்க கவலையாய்க் கிடக்குது.

*செல்லம்மா:*

(சுளகை ஆட்டியபடி) உதை விடுங்கோ.. பக்கத்து வீட்டுச் சனம் நல்ல சனம் போலை.. என்ன கொஞ்சம் தமிழையும் இங்கிலிசையும் கலந்து கதைக்குதுகள்..

*தருமர்:*

கதையைப் பார்த்தால் என்னத்துக்கோ ஆரம்பம் மாதிரிக் கிடக்குது.

*செல்லம்:*

ஆரம்பம்தான்.. அவையின்ரை மூத்தவன் இன்ஜினியராம்.. அடிக்கடி சுவராலை பார்க்கிறனான்..பொடியன் நல்ல எழும்பின பொடியன்.. எங்கடை சிந்தாமணிக்குக் கேட்டுப் பார்த்தால் என்ன..

*தருமர்:*

நானும் உதை நினைச்சனான். எங்கடை பிள்ளையும் வடிவு தானே.. இண்டைக்கு நல்ல நாள் ஆரம்பிச்சால் என்ன எண்டுதான் யோசிக்கிறன்..

*செல்லம்:*

நீங்கள் உப்பிடி யோசிக்கிறதே ஆயிரத்திலை ஒருக்காத்தான்.. மனம் மாற முன்னம் காரியத்திலை இறங்குங்கோ..இப்பவே

போய் பின்னேரம் அவைக்கு நேரம் இருக்கோ எண்டு கேட்டுப் பாருங்கோ..

(தருமர் உடனேயே புறப்படுகிறார்..)

(போனவாக்கில் வந்து)

*தருமர்:*

மெய்யேப்பா.. அவை எல்லாரும் இண்டைக்கு வீட்டிலை இருப்பினமாம்..

*செல்லம்:*

நீங்கள் என்ன விசயம் எண்டு சொன்னனீங்களே

*தருமர்:*

சீச்சீ.. முக்கியமான ஒரு விசயம் எண்டு சொன்னனான்.. அதுக்கென்ன வாங்கோவன் எண்டு சொன்னவை

(தருமரும் செல்லமாவும் நடப்பது போன்ற பாவனையில் திரைக்கு முன்னே வர மேடை ஒழுங்கு உள்ளே நடக்கிறது.)

*தருமர்:*

இசக்குப் பிசகாய் ஒன்டும் கதைச்சுப் போடாதையும்..

*செல்லம்:*

உம்மையிட்டுத்தான் எனக்குப் பயம்.. அவதானமாகக் கதையுங்கோ.. நான் பார்த்துக் கொண்டு இருப்பன்.

(திரை இழுக்கப்படுகின்றது)

(தமிழ்ச் செல்வியும் நந்தகோபரும் இவர்களை வரவேற்கிறார்கள்.)

***தமிழ்:***

வாருங்கோ..

***தருமர்:***

நாங்கள் பக்கத்திலை இருந்தாலும் ஒருக்காலும் வரயில்லை.

***நந்:***

அது பரவாயில்லை.. இப்ப வந்திருக்கிறியள் தானே..

***தருமர்:***

நாங்கள் இண்டைக்கு முதல்முதலாய் வந்தாலும் ஒரு நல்ல காரியமாகத்தான் வந்திருக்கிறம்.

***தமிழ்:***

(மெல்லிய சிரிப்பு)

***தருமர்:***

எங்கடை மகள் சிந்தாமணியைக் கண்டிருப்பியள்.. யூனிவசிட்டியிலை கடைசி வருசத்திலை இருக்கிறாள்.. நல்ல பிள்ளை..

***தமிழ்:***

யெஸ்..யெஸ்.. பார்த்திருக்கிறன்.

***தருமர்:***

அவவுக்கு உங்கடை மகனைக் கேட்கலாமெண்டு வந்திருக்கிறம்.

(சிறிது நேரம் மௌனம்)

***தருமர்:***

எங்கடை குடும்பம் ஊரிலை பெரிய குடும்பம். உங்கடையும் அப்பிடியெண்டு கேள்விப்பட்டனாங்கள்.

***தமிழ்:***

எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.. மகனையும் ஒருக்கா கேட்கவேணும்...

***தருமர்:***

ஓமோம் அது சரி.

***தமிழ்:***

மகன் ஓகே எண்டு சொன்னால்.. எங்களுக்கு லண்டனிலை வீடும்.. இருபதாயிரம் காசும் வேணும்... எங்களுக்கு இதிலை விருப்பமில்லை..ஆனால் வாங்காமல் செய்தாலும் கௌரவ மில்லை.. அது தான்..

*தருமர்:*

சீச்சீ.. அதொண்டுமில்லை இது உலக வழக்கம்தானே.. நாங்கள் எல்லாம் பார்க்கிறம் நீங்கள் பிள்ளையோடை கதையுங்கோ

(அவர்கள் புறப்பட்டு முன்னுக்குவர திரை இழுக்கப்படுகிறது.)

*செல்லம்:*

என்னப்பா நீர் இருபதுக்கு ஓமெண்டிட்டீர். எங்கை போறது.

*தருமர்:*

பார்ப்பம்.. மாப்பிள்ளை நல்லம் சனமும் நல்லம்.

*செல்லம்:*

என்னவோ கஸ்டப்படப்போகிறது நீங்கள்தான்.

(இவர்கள் உள்ளே போக திரை இழுக்கப்படுகிறது.)

*தமிழ்:*

நீர் என்ன நினைக்கிறீர்..

*நந்:*

நல்லது மாதிரத்தான் படுகுது.. எதுக்கும் ராஜீவைக் கேளும். அவனுக்கேதும் இருக்கும்

*தமிழ்:*

ராஜீவ் இஞ்சை வாரும் ஒருக்கா..

*ராஜீவ்:*

என்னம்மா..

*தமிழ்:*

ராஜீவ் உமக்குக் கல்யாணம் செய்து வைக்க யோசிக்கிறம்.. வயதும் வந்திட்டுது.

*ராஜீவ்:*

ஓ! மை கோட்..யார் அது..

*தமிழ்:*

எங்கடை அடுத்த வீட்டுக்காரர்..

*ராஜீவ்:*

ஓ! தற் கேள்.. பரவாயில்லை.. உங்களுக்குப் பிடிச்சால் கோ ஒன்.

(திருமணக் காட்சி)

(திருமணம் நடக்கும்போது கொடுப்பதாகச் சொன்ன பணம் கொடுக்கவில்லை என்று தமிழச் செல்வி திருமணத்தை நிறுத்த சுந்தரரும் நாரதரும் திடுக்கிட்டு முன்னே வருகிறார்கள்.)

---

*சுந்தரர்:*

என்ன நாரதரே அந்த அம்மா ஏன் திருமணத்தை நிறுத்துகிறா?

*நாரதர்:*

உங்களுடைய திருமணமும் இடையிலே நின்றதுதானே சுவாமி.

*சுந்தரர்:*

நாரதரே உம்முடைய வேலையை ஆரம்பித்துவிட்டீர்.. மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகிறீர்.

*நாரதர்:*

வாருங்கள் உள்ளே சென்று பார்ப்போம்...

(உள்ளே வருகிறார்கள்.)

(தருமர் ஓடிப்போய் அவர்கள் காலில் விழுகிறார்)

*சுந்தரர்:*

அம்மா என் இந்தத் திருமணத்தை நிறுத்துகின்றீர்கள்.

*தமிழ்:*

சொன்ன சொல்லை அவர்கள் காப்பாற்றவில்லை..

*நாரதர்:*

அதற்காகத் திருமணத்தை...நிறுத்துவதா?

*தமிழ்:*

இந்த சந்தர்ப்பத்தைவிட்டால் காசு வாங்க முடியாது

***சுந்தரர்:***

(மாப்பிள்ளையைப் பார்த்து) விஞ்ஞானம் வளர்ந்து வருவதாக நாரதர் கூறினார்.. நீர் படித்தவர். உமது அம்மா செய்வது தவறென உமக்குப் புரியவில்லையா?

***நாரதர்:***

சுவாமிகளே பூலோகத்தில் படித்தவர்கள் செய்யும் தந்திரம் இது. அம்மா அப்பாவில் பழிபோட்டு பணம் பறிப்பது.

***தமிழ்:***

ராஜீவ் எழும்பு..

***ராஜீவ்:***

அம்மா யூ ஆர் றோங்..

(தாயைக் கண்டித்துக் கூறிவிட்டு சடுதியாக எழும்பி யாரும் எதிர்பாராமல் சிந்தாமணியின் கழுத்தில் தாலியைக் கட்டிவிடுகிறான். சுந்தரரும் நாரதரும் பூமாலை தூவினர். பின் புரத்தில் மங்கள ஒலி கேட்கிறது.எல்லோரும் திகைத்துப்போய் நிற்கின்றனர்)

திரை மூடி மீண்டும் திறக்கிறது. நாடகத்தில் நடித்த நடடிகர்கள் யாவரும் வரிசையாக சபை வணக்கம் செய்து நிற்கின்றனர்)

# பாஞ்சாலி சபதம்

(இந்த நாடகம் பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தினை தழுவி நாடக வடிவில் அமைத்து இலங்கையிலும் லண்டனிலும் 6 தடவைகள் மேடையேற்றப்பட்டது)

(பாரதிகள் மூவர் கதை செல்கிறார்கள்)

*பாரதி 1*

அத்தின மாநகரத்தினில் வந்தனர்
ஆரியப் பாண்டவர் என்றது கேட்டலும்
தத்தி எழுந்தன எண்ணருங் கூட்டங்கள்
சந்திகள் வீதிகள் சாலைகள் சோலைகள்

*பாரதி 2*

எத்திசை நோக்கினும் மாந்தர் நிறைந்தனர்
இத்தனை மக்களும் எங்கண் இருந்தனர்

இத்தின மட்டும் என வியப்பெய்துற
எள்ளும் விழற்கிட மின்றி இருந்தார்

*பாரதி 3*

மந்திர கீதம் முழங்கினர் பார்ப்பனர்
வன் தடந்தோள் கொட்டி ஆர்த்தனர் மன்னவர்
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறும் ஒலிமிகச் செய்தன.

(சங்கொலி சத்தமாகக் கேட்க பாண்டவர்கள் உள்ளே நுழைகின்றனர்)

*பாரதி 1*

பாணர்கள் துதி கூற-இளம்
பகலவன் எழுமுனர்த் துயிலெழுந்தார்
தோணலத் திணையிலார் - தெயவந்
துதித்தனர் செய்ய பொற் பட்டணிந்து

*பாரதி 2*

பூணணித் தாயுதங்கள் - பல
பூண்டு பொற் சபையிடைப் போந்தனர்
நாணமில் கவுரவரும் - தங்கள்
நாயகனொடு மங்கு வீற்றிருந்தார்

*பாரதி 3*

கேட்டினுக் கிரையாவான் - மதி
கெடுந் துரியோதனன் கிளையினரும்
மாட்டுறு நண்பர்களும் - அந்த
வான் பெரும் சபையிடை இருந்தனர்

(பாரதி 3 அரச சபையை எட்டிப் பார்த்துவிட்டு)

*பாரதி 3*

பாண்டவர் ஆசனத்தமர்ந்த அப்பொழுதில்
பாவி சகுனியும் சொல்லுகின்றான்

(பாரதி மூவரும் மேடைக்கு முன் வந்து சகுனி சொல்வதை செவிமடுப்பது போன்ற பாவனையில இருத்தல் வேண்டும்).

*சகுனி:*

